விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 22 புதன்கிழமை (08.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே



# புலம் பெயர் நாடுகளில் தனிநாட்டினை கோருங்கள்

## மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தமிழருக்கு சொன்ன அறிவுரை



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு என தனிநாடு ஒன்று இல்லாததே தமிழர்களுக்கு இருக்கின்ற பிரதான பிரச்சினை, இந்தப் பிரச்சினைக்கு உள்நாட்டில் தீர்வு தேடுவதைவிட அதிகளவான தமிழ் மக்கள் வாழ்கின்ற புலம்பெயர் நாடுகளில் அங்கு ஒரு பகுதியை தனிநாடாக கோருங்கள் என சிரேஷ்ட விரிவுரையாளர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்களுடன் கப்பல் வருகிறது

### நாடாளுமன்றில் ரணில்

(கொழும்பு)

எரிபொருள்களுடன் இந்திய கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்து கொண்டிருக்கின்றது. அது வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை கொழும்பை வந்தடையும் என்று பிரதமர் ரணில் விக்கிர 23

## தீக்காயங்களுக்குள்ளான குடும்பப்பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை உயிரிழந்தார்.

கல்வியங்காடு ஜி.பி.எஸ் வீதியை சேர்ந்த பிரபாகரன் 23

## அடையாள அட்டையை மீட்க கேணிக்குள் குதித்த மாணவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக பலி

(யாழ்ப்பாணம்)

தவறி விழுந்த அடையாள அட்டையை மீட்க கேணிக்குள் குதித்த மர்ணவன் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நேற்று மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வி கற்கும், மானிப்பாய் லோட்டன் வீதியை சேர்ந்த சூரியகுமார் புகனீதன் (வயது 16) என் 23

## மாவட்ட நீதிபதிகள் 7 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 7 மாவட்ட நீதிபதிகளுக்கு வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றம் 2018 ஜனவரி முதலாம் திகதி நடை முறைக்கு வரும் என நீதிச் சேவைகள் ஆணைக்குழு நேற்று 23

## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்த குடும்பப் பெண் சிகிச்சை பலன் இன்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலன் இன்றி நேற்று உயிரிழந்தார். ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த வ.சசிகலா (வயது 39) எனும் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் உரும்பிராய் 23

## யாழில் மழை காரணமாக 3 ஆயிரம் பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த 6 நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஆயிரத்து 98 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 862 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும்கடந்த 2 ஆம் திகதி ஆரம்பித்த மழை தொடர்ச்சியாக பெய்து வருகின்ற நிலையில் வடக்கில் யாழ் மாவட்டத்திலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதனால் சில சில பகுதிகளில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 24



## எரிபொருள் தட்டுப்பாடு

### மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியுடன் வந்ததால் பரபரப்பு

(கொழும்பு)

பெற்றோலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் அலைமோதும் நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் பெற்றோலுக்குக் காத்திருக்கின்றனர்.

இதனால் போத்தல்களிலோ, கான்களிலோ பெற்றோல் நிரப்ப முடியாது என்று அறி 23

## இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 4 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டதுடன், கைதுசெய்யப்பட்ட மீனவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எம்.எம் 24

## இராணுவம் - இளைஞர்கள் துயிலும் இல்லத்தில் முறுகல்



23

## ஆளுநரின் முறையற்ற செயற்பாட்டால் புலமைப்பரிசில் நிதி வீணடிக்கப்பட்டுள்ளது

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநரின் முறையற்ற செயற்பாட்டால் இலங்கை பிரஜை ஒருவருக்கு கிடைத்த புலமைப்பரிசிலுக்குரிய நிதி வீணடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் ஆளுநருடன் இணைந்து அதிகாரிகளும் வெட்கக்கேடான செயலை புரிந்துள்ளனர் என யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

மேலும் வடமாகாண கல்வி அமைச்சின் மேலதிக கல்விப்பணிப்பாளர், தனக்கு வழங்கப் 23

## பெற்றோல் நெருக்கடியை முகாமை செய்வதற்கு அமைச்சரவை உபகுழு

(கொழும்பு)

பெற்றோல் நெருக்கடி நிலை முகாமைத்துவத்துக்காக அமைச்சரவை உபகுழு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். 23

## முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் ஒரு தொகை மிதிவெடிகள் மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் 50.மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது. 23



## கரும்புத்தோட்ட காணிக்குப் பதிலாக வேறு காணிகளை வழங்க முடியும்

### முதலமைச்சர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்குக் காணி தேவையென்றால் கிளிநொச்சி கரும்புத்தோட்டக்காணிகளுக்குப் பதிலாக மாற்றுக்காணிகளை வழங்கலாம்.

இதுபற்றி கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன் என முதலமைச்சர் தெரிவித்தார். கிளிநொச்சி கரும்புத்தோட்டக் 23

## வட மாகாண சபைக்கு புதிய உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக வடமாகாண சபையின் புதிய உறுப்பினராக அலிக்கான் ஷெரீ் நேற்று பதவியேற்றுள்ளார். கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் றிப்கான் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்



தோற்றம்
1940 - 12 - 25

மறைவு
2017 - 11 - 07

## சபாபதி அருணகிரிநாதன்

### (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

பருத்தித்துறை தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சாளம்பையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி அருணகிரிநாதன் நேற்று (07.11.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சபாபதி - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சோமசேகரம் - கனகம்மா தம்பதியரின் மருமகனும், சிவகடாட்சம், நாகரத்தினம் (அமரர்) ஆகியோரின் சகோதரரும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயபரன் (அமரர்), ஜெயநிமலன் (ஆசிரியர்), ஜெயசிறீதரன் (பிரான்ஸ்), ஜெயப்பிரகாஸ் (பிரான்ஸ்), ஜெயரூபன் (L.I.C) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (பிரதேச செயலகம் - பருத்தித்துறை), காயத்திரி (பிரான்ஸ்), தர்மபாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், தரணிகா, துவாரகன், திவ்வியன், ஹயானி, ஹருண், ஹரிசான், ஹரீஸ், ஹருணி, ஜினாத், டிலானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2017) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாளம்பை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை. (சி-327)

தகவல் :குடும்பத்தினர்
0777238594, 0776510232



தோற்றம்
1930 - 02 - 19

மறைவு
2017 - 11 - 06

## கதிரவேலு கந்தசாமி

மல்லாகம் தேவாலய வீதியைச் சேர்ந்த கதிரவேலு கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (06.11.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், சாந்தினி (சுவிஸ்), நந்தினி (ஜேர்மனி), மாலினி (சுவிஸ்), வதனி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும், குணசிங்கம், வசந்தமோகன், விக்கினேஸ்வரன், கலாவேந்தன் ஆகியோரின் மாமனாரும், தர்சிகா, நிமலதீபன், கதிர்காமநாதன், சப்னா, நிரோஜினி, நிதன், வினோத், வினிபர், அபிராம், அபிஷயா ஆகியோரின் பேரனும், றீத்து, றிஷால், லெஜா, லெஜோன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (09.11.2017) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
மல்லாகம். (1252)

தகவல் : பிள்ளைகள், மருமக்கள்
தொ.பே: 077 612 0827


## விற்பனைக்கு

கிளிநொச்சி 155-ம் கட்டையில் சற்றிங்கிக்கு பயன்படுத்தப்பட்ட 40 Boardகள், 650 முட்டுக்கள், 50 Choiceகள் விற்பனைக்கு உண்டு.

மொத்த விலை - 160,000/=

தொடர்பு: 0766676223

(C-306)



WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித பணம், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(C-305)


## வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

துன்னாலை பகுதியில் இடம்பெற்ற குழு மோதல் ஒன்றின் போது வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், தாமரைக்குளத்தடி துன்னாலையைச் சேர்ந்த இராஜேந்திரன் இரதன் (வயது27) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(ம-60)

# பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்



உயர்திரு.

## சிவபாதம் நந்தகுமார்

(வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்)

வடமராட்சி பதியின்
கல்வி வளர்ச்சிக்காய்
அயராது உழைக்கும்
உத்தமராய் உயர்வுகள்
பல கண்டு – இன்று
அகவை ஐம்பத்தொன்பது
கண்டு வளமாக வாழ
வாழ்த்துகின்றோம் நாம்...


கல்விச் சமூகம், வடமராட்சி

(சி-323)

# 31-ம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
20 . 02 . 1951

மறைவு
12 . 10 . 2017



அமரர்

## கணபதிப்பிள்ளை அன்னலிங்கம்

கடந்த 12.10.2017 அன்று சிவபதமடைந்த இன்பர்சிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், தேவிபுரம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் கணபதிப்பிள்ளை அன்னலிங்கம் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 11.11.2017 அன்று சனிக்கிழமை காலை 6 மணியளவில் அவரது சொந்த ஊரான இன்பர்சிட்டியிலுள்ள அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக் கிரியைகள் அன்னாரின் இன்பர்சிட்டி இல்லத்திலும் இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: தயவுசெய்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

காண்டீபன் விளையாட்டுக்கழகம் அருகாமை,
இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

இங்ஙனம் :
குடும்பத்தினர்

(அ-330)

# வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு கடும் எதிர்ப்பு

## நாட்டைப் பிரிக்க முற்பட்டால் மீண்டுமொரு பேரழிவு ஏற்படும்!

### அபயதிஸ்ஸ தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

இனங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டைத் துண்டுகளாகப் பிரிக்க முற்பட்டால் நாட்டில் மீண்டுமொரு பேரழிவு ஏற்படும் என உத்தேச அரசியல் யாப்பிற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுவரும் முக்கிய பௌத்த பிக்குகளில் ஒருவரான ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பௌத்த பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் எச்சரித்துள்ளார்.



அம்பாந்தோட்டை சிப்பிகுளம் பகுதியில் உள்ள முகம்மதியா இஸ்லாமிய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பேராசிரியர் அபயதிஸ்ஸ தேரர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாட்டில் வாழும் அனைத்து இன மற்றும் மத மக்களை மதித்து அவர்களுக்கான தனித்துவத்தை அங்கீகரித்து நடந்துகொள்வோமானால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படாது.

அதேவேளை தேரவாத பௌத்தத்தை பின்பற்றும் தான் உட்பட இலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும் சாதி மற்றும் குல ரீதியாக பிரிந்து செயற்படுவதாகவும் விமர்சித்த அபயதிஸ்ஸ தேரர் வடக்கு-கிழக்கு இணைப்பிற்கும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

எமது நாட்டிற்கான சுதந்திரத்தை சிங்களத்தலைவர்கள் மாத்திரமன்றி தமிழ் தலைவர்கள், முஸ்லீம்கள் மற்றும் கத்தோலிக்கத் தலைவர்கள் அனைவரும் இணைந்து போராடியே வென்று கொடுத்தனர்.

இதன்போது வெள்ளைக்காரன் தனித்தனியே ஆட்சிகளைப் பிரித்துக்கொடுக்க கதைத்த போது சுதந்திரத்திற்காக போராடிய எமது தலைவர்கள் அதனை நிராகரித்ததுடன் தங்களிடமிருந்து பறித்த போது நாடு எவ்வாறு இருந்ததோ அதே போல் ஒரு நாட்டை திருப்பிக் கொடுக்குமாறு கேட்டனர்.

ஆனால் ஒருபோதும் நாட்டைத் துண்டாடித் தருமாறு எந்தவொரு தலைவர்களும் வெள்ளையனிடம் கேட்கவில்லை.

அதற்கமையத்தான் ஒரே நாடாக எமக்கு சுதந்திரம் கிடைத்தது. அப்போது அநுராதபுரத்திற்கும் கடல் இருந்தது. இந்தத் தகவல் உங்களுக்குத் தெரியுமோ தெரியாது.

ஆனால் இன்று வடக்கு-கிழக்கை இணைத்து நாட்டை பிரிக்க கேட்கின்றனர். இதற்கமைய அநுராதபுரம் அரச மரத்தடி வரை அவர்கள் தமிழீழத்தை பிரித்துத் தருமாறு கோருகின்றனர்.

நாட்டை பல துண்டுகளாகப் பிரித்து ஒருபோதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதனால் இன விகிதாசார அடிப்படையில் நாட்டைத் துண்டாடி நாட்டில் நல்லிணக்கத்தையோ நிரந்தர அமைதியையோ ஏற்படுத்த முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு செய்தால் மனித சடலக் குவியல்களையே நாம் மீண்டும் காண நேரிடும். தற்போது நுவரெலியா - மஸ்கெலியா பிரதேசம் இன விகிதாசார அடிப்படையில் பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஸ்ரீபாத புனித ஸ்தலம் அமைந்துள்ள பகுதியும் இனமொன்றை அடிப்படையாகக் கொண்டு தனிப் பிரதேசமாக பிரிக்கப்பட்டுள்ளது.

இது மகா தவறு. ஒருபோதும் இந்த நாட்டை இன அடிப்படையில் பிரிக்கக்கூடாது.

அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய வகையிலேயே நாட்டை நிர்வகிக்க வேண்டும் என அவர் மேலும் தெரவித்தார். (இ-7)

## மாட்டு வண்டியில் மாகாண சபைக்கு வந்த உறுப்பினர்கள்




(கொழும்பு)

நாட்டில் நிலவும் பெற்றோல் பற்றாக்குறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடமேல் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மாட்டு வண்டியில் நேற்று அவைக்கு வருகை தந்தனர். “எண்ணெயும் முடிந்தது - நாடும் முடிந்தது” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் இவர்கள் ஏந்தியிருந்தனர். (இ-7)

## எரிபொருள் விநியோகக் குளறுபடிக்கு இந்தியாவை குறைகூறி பயனில்லை

### அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு பொது எதிரணியினர் இந்தியாவை குறை கூறுவது தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போன்றதாகும். இதைவிட பொது எதிரணியின் தலைவர், தன் வழமையான திருப்பதி யாத்திரையின் போது இதுபற்றி இந்திய கடவுளிடம் முறையீடு செய்யலாம். உண்மையில், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், 21 நாட்களுக்கு தேவையான எரிபொருளை எப்போதும் சேமித்து வைத்திருக்கும் வழமையை இம்முறை கடைபிடிக்க தவறியமையே, இன்றைய சிக்கலுக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

நாட்டின் அதிகமான தனியார், பொது வாகனங்கள் மற்றும் ஆட்டோ ஓடும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி என்ற முறையில் இது தொடர்பில் தொல்லைகளை சந்தித்துள்ள மக்களிடம் என் வருத்தங்களை தெரிவித்துக்கொள்கிறேன் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் இன்று எது நடந்தாலும் அதற்கு இந்தியாவை தேடி குறை கூறுவது பொது எதிரணிக்கு பழகி விட்டது. எரிபொருள் கையிருப்பு தொடர்பில் வாராந்திர அறிக்கை சமர்பிக்கப்பட்டதாக தெரியவில்லை. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், 21 நாட்களுக்கு தேவையான எரிபொருளை எப்போதும் சேமித்து வைத்திருக்கும் வழமையை கடைபிடித்ததாகவும் தெரியவில்லை.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட கப்பலில் தரமற்ற எரிபொருள் இருந்த காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டது. உண்மையில் இந்திய எரிபொருள் மாபியா இலங்கைக்குள் வியாபித்து இருக்கின்றது என்றால் அது நிராகரிக்கப்பட்டு இருக்காது.

இது போன்று கடந்த காலங்களில் பல்வேறு நாடுகளில் இருந்தும் கொண்டு வரப்படும் எரிபொருள்களும் பல சந்தர்ப்பங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளன. அப்போதெல்லாம் உடனடி தேவைக்கு இந்தியாவில் இருந்தே அவசரமாக எரிபொருள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. இலங்கையில் எரிபொருள் இறக்கமுன் நடைபெறும் பரிசோதனைகள் மூலம் இம்முறை இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தரமற்ற எரிபொருள் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தகைய சந்தர்ப்பங்களை சமாளிக்க, 21 நாட்களுக்கு தேவையான எரிபொருளை எப்போதும் சேமித்து வைத்திருக்கும் வழமை இம்முறை கடைப்பிடிக்க முடியாமல் போனதால் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள இந்திய நிறுவனத்தை குறை கூறுவதும் பிழையானதாகும். இந்த நிறுவனம் இலங்கை எரிபொருள் விநியோகத்தில் 14 வீதத்தை கையாள்கிறது. இந்த விவகாரம் பற்றி ஆராய, ஜனாதிபதி விசேட அமைச்சரவைக் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்தக்குழு நிலைமையை சீர் செய்யும் அதேவேளை இந்தச் சிக்கலுக்கு பின்னணியில் தவறிழைத்துள்ளவர்கள் யார் என்பதை கண்டு பிடிக்கும் பணியிலும் ஈடுபடும் என அமைச்சர் மனோ விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

## அதிகாரப்பகிர்வு கிடைக்குமா?

## சம்பந்தனிடம் தமிழில் கேள்வி கேட்ட நாமல்

Namal Rajapaksa
@RajapaksaNamal

அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதை காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை(1/2) #SriLanka youtu.be/iHP2rPFDjWM

12:00 PM - Nov 7, 2017

2 29 39



Namal Rajapaksa
@RajapaksaNamal

கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை மூத்த அரசியல்வாதி @R_Sampanthan ஐயா அவர்கள் ஏன் உணரவில்லை! (2/2) #SriLanka #lka

12:01 PM - Nov 7, 2017

(கொழும்பு)

அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்ற காரணத்தினால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் இருக்க முடியாது என்பதை எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் உணரவில்லையா? என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

நாமல் இந்த கேள்வியை தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் தமிழில் பதிவேற்றியுள்ளார்.

“அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதை காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை, மூத்த அரசியல்வாதி R.Sampanthan ஐயா அவர்கள் ஏன் உணரவில்லை!” என பதிவேற்றியுள்ளார் நாமல். (இ-7)

அகவை 60 இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



## கௌரவ க.சுரேஷ் பிரேமச்சந்திரன்

இன்று 08.11.2017 தனது 60ஆவது அகவையில் காலடி பதிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமாகிய கௌரவ க.சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

(C-328) - நண்பர்கள்



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532



அகவை நிறைவில் அக மகிழ்ந்த வாழ்த்து



ஸ்ரீமான் சிவபாதம் நந்தகுமார் அவர்கள்
(வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்)

திருவாக், உருவாக், நுண்மாண் நுழைபுலம் மீள்
கல்வித்திட்டமிடலுடன் மும்மொழித்திறன்
முட்டறுத்து நின்று நிலைத்து பகை பல வென்று
பணி பல புரிந்து அன்னையருள்
பெருகிடத் தினம் தினம் வாழ்த்துகின்றேன்!

நெல்லண்டை பத்திரகாளி அம்மன் இலட்சுமணன்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் திருவருள் மிகுந்து சிறக்க வேண்டிப் பணிகின்றேன்.

(சி-319)

இங்ஙனம் - சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ. தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்
B.A, Dip in Edu, M.A, பிரதியதிபர்,
ஆதீனகர்த்தா - தும்பளை, நெல்லண்டை, பருத்தித்துறை.


# தொடரை வென்றது இந்தியா




பந்துக்கு பந்து பரபரப்பான 3ஆவது 'ரி20' போட்டியில் இந்தியா, 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றதுடன், தொடரை 2-1 என 'சுப்பராக' கைப்பற்றியது. 'ஜில்லென்ற' மழை தூறல், கேரளாவின் பாரம்பரிய செண்டை மேளம் முழங்க, ரசிகர்கள் போட்டியின் ஒவ்வொரு அசைவையும் உற்சாகமாக கண்டுகளித்தனர். நியூசிலாந்தின் போராட்டம் வீணானது.

இந்தியா வந்த நியூசிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட 'ரி20' போட்டி தொடரில் பங்கேற்றது. முதல் இரு போட்டிகளின் முடிவில், தொடர் 1-1 என சமனிலையில் இருந்தது இந்நிலையில் 3ஆவதும் இறுதியுமான ரி20' போட்டி நேற்று திருவனந்தபுரத்தில் நடந்தது.

மழை காரணமாக இரண்டரை மணி நேரம் தாமதமாக 8 ஓவர் போட்டியாக குறைக்கப்பட்டது. 'நாணயச்சுழற்சியில் நியூசி லாந்து முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இந்திய அணிக்கு தவான், ரோகித் ஜோடி மீண்டும் மோசமான ஆரம்பம் கொடுத்தது. முதலிரு ஓவர்களில், இந்த ஜோடி 14 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இந்த நெருக்கடியில், ஷிகர் தவான் (6), ரோகித் (8) என, இருவரும் சௌதியின் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழந்தனர்.

அணித் தலைவர் ஹோலி, சோதி ஓவரில் அடுத்தடுத்து பவுண்டரி, சிக்ஸர் என விளாசினார். இவர் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஸ்ரேயாஸ் (6) நீடிக்கவில்லை.

இந்திய அணி 8 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 67 ஓட்டங்கள் எடுத்தது. களத்தில் பாண்ட்யா (14), தோனி (0) இருந்தனர்.

எளிய இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு இந்திய பந்து வீச்சாளர்கள் ஆரம்பத்திலேயே 'வேட்டு' வைத்தனர். புவனேஷ்வர் பந்தில் கப்டில் (1) போல்டானார். பும்ரா 'வேகத்தில்' ரோகித்தின் 'சுப்பர் பிடியில்' மன்ரோ (7) வீழ்ந்தார். நியூசிலாந்து அணி 4 ஓவர்களில் 26/2 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்த 24 பந்துகளில் 42 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், குல்தீப்பை அழைத்தார் ஹோலி. இதற்கு நல்ல பலன் கிடைத்தது. இவரது 3ஆவது பந்தில், பாண்ட்யாவின் துல்லிய 'த்ரோவில்' வில்லியம்ஸன் (8) ரன் அவுட்டானார். அடுத்த பந்தில் பிலிப்ஸ் (11) திரும்பினார். போட்டியின் 6ஆவது ஓவரை வீசிய சகால், 3 ஓட்டங்கள் மட்டும் விட்டுக் கொடுத்து, போட்டியை இந்திய அணியின் பக்கம் திருப்பினார். நியூசிலாந்து அணிக்கு தேவையான 'ரன்ரேட்' (14.50 ரன்) எகிற, நிக்கோல்ஸ் (2), புரூஸ் (4) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

கடைசி ஓவரில் நியூசிலாந்து வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பாண்ட்யா வீசிய இந்த ஓவரின் முதல் இரு பந்தில் ஒரு ரன் (உதிரி) கிடைத்தது. 3ஆவது பந்தில் கிராண்ட்ஹோம் சிக்ஸர் அடிக்க, ரசிகர்கள் 'டென்ஷன்' அடைந்தனர். 4ஆவது பந்தில் 'வைட்' உட்பட, 2 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. அடுத்த 2 பந்தில் 10 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், 5ஆவது பந்தில் சான்ட்னர் 2 ஓட்டங்கள் எடுக்க, இந்தியாவின் வெற்றி உறுதியானது. கடைசி பந்தில் ஒரு ஓட்டம் மட்டும் எடுக்கப்பட்டது.

நியூசிலாந்து அணி 8 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 61 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. சான்ட்னர் (3), கிராண்ட்ஹோம் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர். 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்ற இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிராக முதல் முறையாக 'ரி20' தொடரை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2018ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், என்பவற்றினை 01.01.2018 தொடக்கம் 31.12.2018ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 08.11.2017 - 20.11.2017 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 21.11.2017 பி.ப 02.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 21.11.2017 பி.ப 2.00 மணிக்கு

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 10,500,000.00 | |
| 02 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 2,942,000.00 | 250.00 |
| 03 | உடுவில் கீரிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 172,500.00 | |
| 04 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 44,000.00 | 250.00 |
| 05 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 58,000.00 | 250.00 |
| 06 | கோழிக்கடை இல 06 | 750.00 | 10,000.00 | 169,000.00 | 250.00 |
| 07 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 40,700.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 01 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 20,476,000.00 | |
| 02 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 47,500.00 | |
| 03 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 31,500.00 | |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2017.10.19ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

தி.சுதர்சன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(C-324)

# தேர்தல் வர்த்தமானியில் சிக்கல் திருத்தத்துக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்குரிய உறுப்பினர்கள் எண்ணிக்கையை வரையறுக்கும் வர்த்தமானி அறிவித்தல் இவ்வார இறுதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வர்த்தமானியின் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள போதிலும், அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க மீண்டும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியானதன் பின்னரே உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# மணலால் பயணிக்க முடியாத நிலை



(கரணவாய்) வீதிக்கு அருகாமையில் பறிக்கப்பட்டுள்ள மணலால் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கின் மணற்காட்டிற்கு செல்லும் வீதியே இந்நிலையில் காணப்படுகின்றது.

எனவே வீதிக்கு அருகாமையில் பறிக்கப்பட்டுள்ள மணலை வேறு இடத்தில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாது பறிக்குமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளது. (இ-60)

# பிள்ளையான் மீள விளக்கமறியலில்



(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திகாந்தன் இன்று வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை. எம்.இஸ்ஸதீன் இந்த விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் 25 ஆம் திகதி நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப்படுகொலை தொடர்பாக சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7)

பொலிகண்டி மேற்கு கிராம சேவையாளர் அதிகாரி பிரிவில்
கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

## கணக்காய்வு மீதிகளை உறுதிப்படுத்தல்

எமது சங்கத்தில் 01.01.1995 - 31.10.2010 வரையான கணக்குகள் நாட்டில் ஏற்பட்ட சுனாமி மற்றும் அசாதாரண சூழ்நிலையால் அழிந்துவிட்டது. சங்கத்தில் கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இவ் இடைப்பட்ட காலத்துடன் தொடர்புடைய அனைத்து அங்கத்தவர்களும் மற்றும் சங்கத்துடன் தொடர்புபட்ட அனைத்து நபர்களும் நிறுவனங்களும் சங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட வருமதி, சென்மதி மீதிகளை 22.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தவும். தவறும் பட்சத்தில் சங்கத்தில் தற்போது காணப்படும் மீதிகளையே சரியெனக்கருதி கணக்குகளில் உள்வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (சி-321)

சங்க நிர்வாகம்.

# மரண அறிவித்தல்

## திரு. சின்னத்துரை அருணகிரிநாதன்

*(உரிமையாளர், பிரதீபா மரக்காலை, முன்னாள் பிரதேச சபை ஊழியர்)*

**தோற்றம்: 1949.04.20** **மறைவு: 06.11.2017**



முடவேம்படி கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அருணகிரிநாதன் 06.11.2017 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை, சிரோன்மணி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் வலயம்), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவமணியின் பாசமிகு கணவரும், வாசுகி (ஜேர்மன்), தர்சினி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், முல்லைத்தீவு), பிரசாத் (முன்னாள் இ.போ.ச. சாலை பரிசோதகர்), பத்மினி (கனடா), பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், நேசாநந்தன் (ஜேர்மன்), சுதாகரன் (மோகன்), தாரிணி, சசிகுமார், தவராஜா (அபி.உத்தியோகத்தர், கமநலசேவை புத்தூர்) ஆகியோரின் மாமனாரும், டாரிணி, லிருஷன், புவிஷன், நிவேதிகா, அபிஷன், டினோஜன், கபினாஸ், நிகிதன், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை வியாழக் கிழமை (09.11.2017) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். (1250)

முடவேம்படி,
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

077 760 5776

தகவல்:
குடும்பத்தினர்.

# இராசி பலன்

08.11.2017
(ஐப்பசி 22,புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 12.48 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 9.07 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுஷம், கேட்டை | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத | சூரி, சுக், குரு | செவ் |

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், உடல் நலன் சீராகும், பயணங்களால் பலனுண்டு, தாய்வழி உறவினர் வழியில் அனுகூலம் உண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், நிதி நிலை உயரும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்களின் வருகையால் செலவு நடைகள் அதிகரிக்கலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், உடல்நலன் சீராகும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்.

**சிம்மம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

# தமிழ் மக்களுக்கு நிரந்தரத்தீர்வு வேண்டி 7வது திருமுறைச் சிவவேள்விப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வை வேண்டி அளவெட்டி திருவடி நிழல் மாடாலய கூட்டுறவாளர் வீதியிலுள்ள ஆறுமுக நாவலர் திருமுறை மண்டபத்தில் 7ஆவது திருமுறைச் சிவ வேள்விப் பெருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று முகூர்த்தப் பத்திரிகை வாசிக்கப்பட்டு 5.55 மணிக்கு திருமுறைசிவவேள்வி ஆரம்பமாகி தொடர்ந்து இரவு-பகலாக 12 நாட்கள் இடைவிடாது சிவத் திருமுறைகள் ஓதப்படும். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அகண்டநாம கூட்டுப் பிரார்த்தனையுடன் சிவ வேள்வி நிறைவடையும்.

மேலும் இவ் சிவவேள்விப் பெருவிழாவில் கலந்து கொள்ளவுள்ள அடியார்களுக்கான தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளதால் சிவவேள்விப் பெருவிழாவில் கலந்துகொள்ள விரும்பும் பக்த அடியார்கள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் 077 226 2 572 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை முன்பதிவு செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(இ-10)

# கட்டாக்காலிகளால் பயிர்கள் நாசம்



(யாழ்ப்பாணம்)

கரணவாய் கிராய் பகுதியில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பமாகி பயிர்கள் முளைத்துள்ள நிலையில் வயல் நிலங்களுக்குள் கட்டாக்காலி கால்நடைகள் நுழைந்து பயிர்களை நாசம் செய்வதாகவிவசாயிகள்கவலை வெளியிட்டுள்ளனர்.

பெருந்தொகைப்பணத்தை முதலிட்டு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயிர்கள் முளைத்து வரும் நிலையில் கால்நடைகள் சேதம் செய்வதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையெடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-60)

# 25 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கல்





(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் இந்த ஆண்டு இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 மாணவர்களுக்கான சீருடைகள் வழங்கும் நிகழ்வு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸார், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# மஹா கும்பாபிஷேகம் நாளை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை நடைபெறும்.

இதனை முன்னிட்டு இன்று புதன்கிழமை இரவு 8.30 மணி தொடக்கம் நாளை காலை 6.30 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

நாளை காலை 6.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கும்பாபிஷேக பூஜைகள் ஆரம்பமாகி முற்பகல் 10 மணி தொடக்கம் 10.50 வரையிலான சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும். (இ-10)

# வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிவதொண்டன் நிலைய கார்த்திகை-மார்கழி மாதத்திற்கான இதழ் வெளிவந்துள்ளது. (இ-7)

# ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆக்கிரமித்துள்ள வெள்ளம்




(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மந்துவில் வடக்கு ஆரம்பசுகாதார நிலையவளாகம் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. மந்துவில் பகுதியில்கடந்த சிலதினங்களாக கடும் மழை பொழிந்து வருகிறது.

இதனால் ஆரம்ப சுகாதார நிலையத்தினுள் மழை நீர் சூழ்ந்து நீர் வழிந்தோட முடியாத நிலையில் காணப்படுவதனால் மருந்துவ பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குள் புகுந்துள்ள மழைநீர் வழிந்தோட உரிய நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-10)




யாழ்.குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் மல்லாகம் பேருந்து தரிப்பிடத்தினுள் வெள்ள நீர் உட்புகுந்ததால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியிருந்தனர்.

# வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் மாணவர்கள், மக்கள் பெரிதும் பாதிப்பு



மல்லாகம் கட்டுவன் வீதி புனரமைக்கப்படாததால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். வீதியில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தால் மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். இது குறித்து உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் பலனில்லை என அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். - (இ-7)



சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில், கிறிஸ்தவ கல்வி மற்றும் விளையாட்டு,தலைமைத்துவ பயிற்சிப் பிரிவின் ஒழுங்குபடுத்தலில் தேசிய கிறிஸ்தவ சபை மற்றும் YMCA நிறுவன நிதி உதவியுடன் பாலியல் தொற்று நோய்கள், நீரிழிவுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. இதில் 150 மாணவர்கள் கலந்து கொண்டனர்.



அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய 57 ஆவது சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் அண்மையில் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர் நித்திய தசீதரன் அரங்கில் சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சித்தாந்த சிரோமணி மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெற்றது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் கலந்து கொண்டார்.

# VANCANCIES
# UNIVERSITY JAFFNA, SRI LANKA
## FACULTY ARTS

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

Senior Professor/ Professor of **Geography/ Economics/Political Science/ Sociology/ Education / Fine Arts / Tamil / Hindu Civilization / Linguistics**

Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in **Archeology / Economics/Political Science/ Sociology/ Philosophy/ Law/Home Economics /Translation Studies/Media Studies/*Education / Fine Arts / Hindu Philosophy / Sanskrit / Christian Civilization / Linguistics / English Literature / Tamil / Music(Vocal/Violin/Miruthangam) / Dance (Bharathanatiyam) / Art & Design (Painting / Sculpture / Computer Graphics) / Drama & Theatre Arts**

**Instructor Grade III in Music (Vocal/Violin) / Dance (Bharathanatiyam / Carnatic Vocal Music) / Art & Design(Painting / Sculpture) / Drama & Theatre Arts**

**Instructor Grade III in English**

*** For the Position in Education**

Preference will be given to those who have relevant special degree with major component in Social Science/Commerce & Management/Biological Science

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.128,870 – 11x2740 – 159,010/- p.m |
| Professor | Rs.108,490 – 13x2520 – 141,250/- p.m |
| Senior Lecturer Grade I | Rs.87,415 – 7x2020 – 101,555/- p.m |
| Senior Lecturer Grade II | Rs.76,275 – 11x1520 – 92,995/- p.m |
| Lecturer (Probationary) | Rs.53,235 – 10x1240 – 65,635/- p.m |
| Instructor Grade III | Rs.40,920 - 18 x 615 - 51,990/- p.m |

**Note:**

The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2017, 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016 dated 05.12.2016.

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015:

i) Academic allowance
Senior Professor - 167%
Professor - 162%
Senior Lecturer Grade I/Grade II - 151%
Lecturer (Probationary) - 115%

ii) Additional monthly allowance – 26% (for all the post)

iii) Research allowance - 35% (Payable to the Academic staff only based on the research activity)

2. Cost of living allowance of Rs.7,800/- p.m. (for all post)

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above

ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system

iii) Gratuity payments

iv) Employees' Trust Fund benefits

v) Free Medical Services

**Closing date** (application should reach us on or before the given date):
**Post of Senior Professor/ Professor - 10.01.2018**
**Other posts - 08.12.2017**

Applications and other documents for the Post of **Senior Professor/Professor** shall be sent to the Vice-Chancellor with a covering letter. **Applications for the other posts**, completed applications along with certified photocopies of the educational & professional qualifications with statement of the Degree and service certificates should be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

* Applicants for the **Post of Professor** are requested to submit the following in addition to the prescribed Application Form:

a) 18 copies of his/her Curriculum Vitae

b) 18 copies of self-assessment of his/her whole career that lists and specifies the contribution to:

- Teaching, Scholarship and Academic Development
- Research, Scholarship and Creative Work
- Dissemination of Knowledge
- Awards, University, National and International Development Activities

The Self Assessment should be prepared in accordance with the marking scheme, (issued with this document) giving details under each heading/ sub heading.

c) Three copies each of the documents to support self assessment in :

- Teaching, Scholarship and Academic Development (Section 1.0)
- Research, Scholarship and Creative Work (Section 2.0)
- Dissemination of Knowledge (Section 3.1)
- Awards, University, National and International Development Activities and other relevant documents listed in the self assessment. (Section 3.2 & 3.3)

(Section 2.0 & 3.1 could be prepared as a separate document)

d) Titles of five (05) outstanding research publications/research papers by the candidate.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order /Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** position should submit **separate application.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statatory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
**07.11.2017**

C-322


# மனுஸ் தீவு அகதி முகாமிற்கான அடிப்படை வசதிகள் வழங்கப்படாது

## பப்புவா நியூகினிய நீதிமன்றம் தீர்ப்பு

(பப்புவா நியுகினிய)

மனுஸ் தீவு அகதி முகாமிற்கான அடிப்படை வசதிகளை மீளவும் வழங்குமாறு கோரி தொடரப்பட்டிருந்த வழக்கிற்கான தீர்ப்பை பப்புவா நியுகினி நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் குறித்த முகாமிற்கு மீண்டும் அடிப்படை வசதிகளை வழங்க முடியாது என்று நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 600 அகதிகள் நிர்க்கதியாகியுள்ளனர்.

இந்த நிலையில், அங்குள்ள அகதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி பென் லோமாய் இதனை தெரிவித்தார்.

மேலும், குறித்த அகதிகளை பப்புவா நியூகினி மற்றும் லோரெங்கோ ஆகிய முகாம்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதும், இது அகதிகளின் உரிமை மீறலாக பார்க்கப்படுகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## பச்சைமிளகாய் 1கிலோ 1,200 ரூபா

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் பருவமழை பெய்து வருகின்ற நிலையில் பெரும்பாலான வீதிகள் மற்றும் வயல் வெளிகள், தாழ்நிலப்பிரதேசங்கள் என்பன வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

சில மேட்டுநில வயல் நிலங்களில் விவசாயிகள் உழவு வேலைகளை ஆரம்பித்துள்ள நிலையில் ஏற்கனவே விதைத்த சில வயல்நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலான வயல் நிலங்களில் அதிகளவு பாதிப்பில்லை என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த காலப்பகுதியில் கடலில் மீன் பிடிபடுகின்ற வீதம் அதிகரித்துக் காணப்படுவதாகவும், பாரைக்குட்டி மாங்கு மீன்கள் அதிகமாக பிடிபடுவதாகவும், கீரி மீன் ஒரு கிலோ 150 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை விற்கப்படுவதாக மீனவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

எனினும் மரக்கறிகளின் விலை உச்சத்தை எட்டியுள்ளதாக பொதுமக்கள் விசனம் வெளியிடும் அதேவேளை, பச்சை மிளகாய் கிலோ 1,000 தொடக்கம் 1200 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும், தேங்காயின் விலை 100 ரூபாயைத் தாண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-7)


யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
'மதசார்பற்றது' 'ரகசியமானது' • இலவச சேவை!
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

வைத்தியம்

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு. தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப் பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடற்பருமன் குறைத்தல் (வயிறு/ மார்பு/கை) அல்லது கூட்டுதல், ஆண்மைக்குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு மருந்தின்றி பக்கவிளைவின்றி அக்குபன்சர் சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: (ACU)Dr.Sanker
T.P: 077 035 7307

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:QS, MSc கட்டார்<br>தொ.இ: E/7925 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/கனடா குடியுரிமை<br>தொ.இ: G/7976 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>தகைமை/தொழில்: HNDE/ உதவிபொறியியலாளர்<br>தொ.இ: B/7926 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7979 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 72 செவ் 8 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L/ முகாமையாளர்<br>தொ.இ: E/7928 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி.பா: 56 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/தனியார் தொழில்<br>தொ.இ: G/7985 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 11செவ் 12 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:B.Eng பொறியியலாளர்<br>தொ.இ: B/7930 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:ICT/அரசதொழில்<br>தொ.இ: G/7989 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சிப் பகுதியில் 390 மில்லி கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த வருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் 390 மில்லி கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒரு வரைக் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட் டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப்பகுதியில் 55 கிராம் கஞ்சா வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 55 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப்பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவரைக் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து நேற்று முன்தினம் குறித்த பெண்ணை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த இளைஞர் ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து குறித்த இளைஞரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றவருக்கு 6 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், சாரதி யனுமதிப் பத்திரம் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச்சென்ற ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் 6 ஆயிரத்து 500 ரூபா ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட் டதுடன். சாரதியனுமதிப்பத்திரம் ஒருமாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப்பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட மூன்று பேருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் 375 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த இரண்டு பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் இரண்டு போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த மூவரையும் வெவ்வேறு தினங்களில் கைது செய்து வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் மூவரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப்பகுதியில் 25 போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் 25 போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் 28 போத்தல் கசிப்பு கொண்டு சென்றவருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் 28 போத்தல் கசிப்பினை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரையும் சான்றுப்பொருட்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய தையடுத்து 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன். மோட்டார் சைக்கிள் உரிமை தொடர்பான விசாரணைக்கு தவணையிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖


கிளிநொச்சிப் பகுதியில் ஐந்து போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட இளம் பெண்ணுக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் ஏற்கனவே கசிப்புடன் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டபோதும். மீளவும் ஐந்து போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன். குறித்த பெண் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை 20ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-315)

## இரு தடவைகள் அபிவிருத்திப்பணிகள் நடைபெற்றும்

# மன்னாகண்டல் குளம் உடைப்பெடுப்பு; தேங்கி நின்ற நீர் வீண் விரயமானது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட மன்னாகண்டல் குளம் நேற்று முன்தினம்அதிகாலை உடைப் பெடுத்தமையால் நீர் முழுவதும் வீண்விரயமாகியுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

இந்தக்குளம் கடந்த 2014 ஆம் ஆண்டு 1940000 ரூபா பெறுமதியில் ஆழப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதோடு 2015 ஆம் ஆண்டு 1898928.57 ரூபா பெறுமதியில் துருசு பகுதியிலிருந்து வாய்க்கால்கள் அமைக்கப் பட்டு இரண்டு தடவையில் மொத்தமாக 3838928.57 ரூபா பெறுமதியான நிதியில் அபிவிருத்திப் பணி மேற் கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் துருசு பகுதியில் குளம் உடைப்பெடுத்து சுமார் பத்து அடிக்கும் நீளமான அணைக்கட்டு உடைந்துள்ளது. குறித்த குளத்தில் இரண்டு தடவை அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் குறித்த பகுதியின் அபிவிருத்திப் பணி சரிவர செய்யப்படவில்லை.

இதுகுறித்து கருத்து தெரிவித்தவர்கள் கூறுகையில், குறித்த துருசின் கீழ்பகுதியில் பழைமையான கொட்டு ஒன்றே காணப்பட்டிருப்பதாகவும் குறித்த பகுதி அபிவிருத்திப் பணிக்கு நிதி ஒதுக்கவில்லை எனவும் இந்த இடத்தில் உடைமை ஏற்பட்டு உடைப்பெடுத்திருக்கிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த பகுதி கமக்கார அமைப்பின் தலைவர், கடந்த இரண்டு மூன்று வருடமாக வரட்சி காரணமாகவும் நீர் இல்லாது விவசாயம் பாதிப்படைந்திருந்தது.

இந்நிலையில் இந்த குளத்தில் அண்மைய நாட்களாக நீர் நிறைந்து வருவதை அவதானித்தோம். இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை இந்தக் குளம் உடைப் பெடுத்து குளத்து நீர் வெளியேறியுள்ளது. இந்நிலையில் அதிகாரிகள் வந்து பார்வையிட்டுள்ளனர். உடனடியாக சீர் செய்யப்படும்.

எனவே விரைவாக புனரமைத்தால் இனிவரும் நீரையாவது தேக்கி எமது குளத்தின் கீழுள்ள நூறு ஏக்கர் வரையான வயல் நிலங்களை பாதுகாக்க வழி வகுக்கும் எனவும் தெரிவித்தார்.

எது எவ்வாறிருப்பினும் குளத்திற்கு 3838928.57 ரூபா பெறுமதியான நிதி ஒதுக்கீடு செய்தும் இன்று குளம் உடைப்பெடுத்து நீர் இல்லாமல் போய்விட்டது மக்களுக்கு பாதிப்பே. இது யாருடைய தவறு என அவர் கேள்வி எழுப்பினார். (2-281)

# பாடசாலைகளைவிட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாடசாலைகளை விட்டு மாணவர்கள் இடைவிலகும் தொகை அதிகரித்து வருவதாக பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேற்படி மாவட்டங்களின் பின்தங்கிய கிராமங்களில் அண்மைய நாட்களாக பாடசாலைகளை விட்டு மாணவர்கள் இடைவிலகும் தொகை மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட தொகை என்பன சடுதியாக அதிகரித்து வருகின்றன. இது தொடர்பில் பெற்றோர்கள், சமூகநலன் விரும்பிகள் இது தொடர்பான விடங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் கூடிய கவனமெடுக்க வேண்டும் என பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில், விசுவமடு, உடையார்கட்டு உள்ளிட்ட பகுதிகளிலும் துணுக்காய், மாந்தை கிழக்குப்பகுதிகளிலும் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகுகின்ற அல்லது ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட தொகை அதிகளவில் காணப்படுகின்றன.

குறிப்பாக இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற குடும்பங்களின் பொருளாதார நெருக்கடி மற்றும் பாடசாலைகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை இவ்வாறு இடைவிலகுவதற்கும் ஒழுங்கற்ற வரவுகளுக்கும் காரணமாக இருப்பதாக பல பாடசாலை அதிபர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் இவ்வாறு இடைவிலகுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் ஒழுங்கற்று வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இவ்வாண்டில் பாடசாலைகளுக்குச் செல்லாத மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக பாடசாலைகளிலும் சிறுவர் இல்லங்களிலும் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இருந்தபோதும் இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களிலும் மேலும் இந்தத் தொகை அதிகரித்துக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-315)



# மன்னாரில் தேங்காய்க்கு தட்டுப்பாடு

மன்னாரில் தேங்காய்க்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையினால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

நாட்டில் தேங்காய்க்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு அதிக விலைக்கு தேங்காய் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந் நிலையில் மன்னாரில் போதிய அளவு தேங்காய் காணப்பட்ட போதும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்களில் தேங்காய்க்கு பாரிய தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

சில வர்த்தக நிலையங்களில் தேங்காய் ஒன்று 80 ரூபாய் முதல் 95 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தேங்காயை பெற்றுக்கொள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்திற்குட்பட்ட 12 குளங்களிலும் 30 வீதமான நீர் சேமிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக் குளம் நீர்ப்பாசனத் திணைக் களத்தின் கீழுள்ள பன்னிரண்டு குளங்களிலும் 30 வீதமான நீர் சேமிக்கப்பட்டுள்ளதாக நீர்ப் பாசனத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீண்டகால வரட்சிக்குப் பின்னர் பெய்து வரும் பருவ மழையினால் குளங்களினுடைய நீர் மட்டம் ஓரளவு உயர் வடைந்துள்ளன.

இவ்வாறு பெய்த கனமழையினால் வவுனிக்குள நீர்ப் பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள பன்னிரண்டு குளங் களிலும் 30 வீதமான தண்ணீர் சேகரிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது 26 அடி நீர்கொள் ளவு கொண்ட வவுனிக்குளத் தின் நீர்மட்டம் 12 அடி 6 அங் குலமாகவும் 10 நீர்கொள்ளளவைக் கொண்ட அம்பலப் பெருமாள் குளத்தினுடைய நீர் மட்டம் 3 அடி 3 அங்குலமாகவும் 12 அடி நீர்கொள்ளளவைக்கொண்ட ஐயன்கன் குளத்தின் நீர்மட்டம் 6 அடி 3 அங்குலமாகவும் 11 அடி 6 அங்குல நீர்கொள்ளளவைக் கொண்ட கல்விளான் குளத்தின் நீர்மட்டம் 2 அடி 2 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் நீர்கொள்ளளவைக்கொண்ட கோட்டைகட்டிய குளத்தின் நீர்மட்டம் 6 அடி 6 அங்குலமாகவும் 11 அடி நீர் கொள்ளளவைக்கொண்ட கொல்லவிளான் குளத்தின் நீர்மட்டம் 6 அடி 10 அங்குலமாகவும் 12 அடி 6 அங்குலத்தைக் கொண்ட மல்லாவிக்குளத்தின் நீர்மட்டம் 7அடி 3 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் கொண்ட மருதங் குளத்தின் நீர்மட்டம் 7 அடி ஒரு அங்குலமாகவும் 9அடி 6 அங்குலம் கொண்ட பழைய முறிகண்டிக்குளத்தின் நீர் மட்டம் 4 அடி 8 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் நீர் கொள்ளளவைக்கொண்ட பனங்காமம் குளத்தின் நீர்மட்டம் 4 அடி ஒரு அங்குலமாகவும் 10 அடி நீர்கொள்ளளவைக்கொண்ட தென்னியங்குளத்தின் நீர் மட்டம் 4 அடி ஒரு அங்குலமாகவும் 11 அடி 2 அங்குலம் நீர்கொள்ளளவைக்கொண்ட தேறாங்கண்டல் குளத்தின் நீர்மட்டம் 8 அடியாகவும் உயர்வடைந்துள்ளதாகவும் நீர்ப்பாசனத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-315)



# வீதியோரங்களில் குப்பை கொட்டுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் குப்பை கொட்டுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் ந.ஜெயராஜா தெரிவித்துள்ளார்.**

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியின் சில இடங்களில் இரு மருங்கிலும் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதேபோல புதுக்குடியிருப்பு வற்றாப்பளை வீதியிலும் இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுகின்றன.

மழை காலங்களில் குறித்த குப்பைகளில் இருந்து துர்நாற்றம் வீசுவதோடு இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் நேற்றைய தினம் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை செயலாளரைத்தொடர்புகொண்டு வினவியபோது, குறித்த பகுதிகளில் எந்தவித அனுமதிகளுமின்றி சிலர் சட்டவிரோதமான முறையில் குப்பைகளைக் கொட்டி வருகின்றார்கள்.

எதிர்காலத்தில் இவ்வாறு குப்பை கொட்டுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், குப்பை கொட்டுபவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார்.

பிரதேச சபையினால் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்பட்டு மன்னாகண்டல் பகுதியில் கழிவுகளைக் கொட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை சேகரித்து அவற்றை பிரதேச சபைக்கு அறியத் தருமிடத்து அவற்றை பிரதேச சபை உரிய முறையில் அகற்றுமென்றும் குறிப்பிட்டதுடன், கழிவுகளை வீதியோரங்களிலும் வடிகால்களுக்குள்ளும் போட்டமையால் அண்மையில் பெய்த மழை வெள்ளத்தினால் சில வீதிகளில் நீர்தேங்கிக் காணப்பட்டதுடன், வர்த்தகர்கள், பொதுமக்கள் பல அசௌகரியங்களையும் எதிர்கொண்டிருந்தனர்.

ஆகவே கழிவுகளை உரிய முறையில் சேமித்து பிரதேச சபை ஊடாக அகற்றுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமென அவர் கேட்டுக் கொண்டார். (2-315)

# சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக வவுனியாவில் துண்டுப் பிரசுரங்கள்




(குருமன்காடு)

வவுனியாவில் சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

பெற்றோர்களை அழித்து சைட்டத்தை பாதுகாப்பதா? ரணில் - மைத்திரி தீர்வு உன் கையில்!, என்பதாக பிரசுரங்களில் காணப்படுகின்றது.

இந்தத் துண்டுப் பிரசுரத்திற்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மருத்துவபீட மாணவர் செயற்பாட்டுக்குழு உரிமை கோரியுள்ளது. வவுனியா நகரப் பகுதிகள், பேருந்து நிலையம், குருமன்காடு போன்ற பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டு காணப்படுகின்றன. (2-250)

# பாவனையாளர்களுக்கு வழங்கப்படாதிருந்த மின்சாரக்கட்டணப் பட்டியல்கள் விநியோகம்

## கிளிநொச்சி மாவட்ட பிராந்திய மின் அத்தியட்சகர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாவனையாளர்களுக்கு வழங்கப்படாதிருந்த மின் பாவனைக் கட்டணப்பட்டியல்கள் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருவதாக பிராந்திய மின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த ஒரு வருடமாக மின் பாவனை வாசிப்பு கட்டணப் பட்டியல்கள் பாவனையாளர்களுக்கு வழங்கப்படாதிருந்ததாகவும் இதனால் குறித்த மின் பாவனையாளர்கள் தமது மின் கட்டணத்தை ஒரு தடவையில் சேர்த்து கட்டுவதற்கு முடியாதநிலை ஏற்படுமெனவும் மின் கட்டணப்பட்டியல்களை விநியோகிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகரைத் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த விடயம் தொடர்பில் மின்மானி வாசிப்பாளர் இன்மையால் குறிப்பிட்ட காலம் மின் கட்டணப்பட்டியல்கள் வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டன.

தற்போது அவை சீர் செய்யப்பட்டு மின் கட்டணப்பட்டியல்கள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (2-315)

# ஆற்றுமணல் கடத்திய குற்றச்சாட்டில் டிப்பர்கள், உழவு இயந்திரங்கள் மாட்டின



சட்டவிரோதமான முறையில் ஆற்று மணலை கடத்திச் சென்ற 3 டிப்பர் வாகனங்களையும் மற்றும் 5 உழவு இயந்திரங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 8 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10 மணி தொடக்கம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணி வரையிலான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய மல்லாவி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையப் பிரிவுகளில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் முன்னதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்விளான், பாரதி நகர், விநாயகபுரம், புத்துவெட்டுவான், ஐயங்கன் குளம் ஆகிய கிராமப் பகுதிகளில் வைத்து சட்டவிரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த 5 உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 5 பேரையும் கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது, பிரமந்தனாறு காட்டுப் பகுதியில் இருந்து ஆற்று மணலை ஏற்றி பயணித்த 3 டிப்பர் வாகனங்களைக் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இரண்டு சம்பவங்களின் போதும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் சந்தேக நபர்களையும் மல்லாவி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வாகன வரி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நீண்டநேரம் காத்திருப்பு

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரம் பெறுவதில் பொதுமக்கள் சிரமத்தை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவான வாகன உரிமையாளர்கள் வாகன வரி அனுமதிப்பத்திரத்தை பெற பிரதேச செயலகத்தை நாடி வருகின்ற போதிலும் கணனி கோளாறு மற்றும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை என்பவற்றை காரணம் காட்டி நீண்ட நேரம் காத்திருக்க வைப்பதாக தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அரச உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கஷ்ட நிலையை அனுபவிக்க வேண்டி ஏற்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் உரிய அதிகாரிகள் இது தொடர்பாக கவனம் செலுத்தி வாகன வரி அனுமதிப்பத்திரத்தை விரைவில் பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கின்றனர். (2-250)

## விசுவமடு பொதுச்சந்தையின்

# நவீன மலசலகூட தொகுதி விரைவில் திறக்கப்படும்

முல்லைத்தீவு விசுமவடு பொதுச்சந்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நவீன மலசலகூடத்தொகுதி மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் முல்லைத்தீவு விசுமவடு பொதுச் சந்தையில் 1.50 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நவீன மலசலகூடத்தின் கட்டுமானப்பணிகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

இவற்றில் ஒருசில வேலைகள் காணப்படுவதாகவும் அவற்றை சீர் செய்து மக்கள் பாவனைக்கு கையளிக்கவிருப்பதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக மக்கள் கூடுகின்ற ஓர் இடமாககாணப்படுகின்ற விசுமவடு பொதுச்சந்தைப்பகுதியில் நீண்டகாலமாக கழிப்பறை வசதிகளின்றி காணப்பட்டதையடுத்து இதன் தேவை கருதி மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏனையோர்கள் பயன்படுத்தக் கூடிய நவீன வசதிகொண்ட கழிப்பறை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**சித்த மருத்துவத்தில் உடலின் ஆரோக்கியத்தை காக்கவும் நோய்களைத் தவிர்க்கவும் உங்கள் பிரக்ருதி/ யாக்கையின் இலக்கணத்தை எவ்வாறு அறிந்து கொள்வது?**

## பித்த பிரக்ருதி
## (பித்த தன்மையுடைய மனிதர்கள்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

பித்த பிரக்ருதிக்காரர்கள் நடுத்தர ஆசாமிகள். சாதாரண உடல்வாகு கொண்டிருப்பார்கள். பசி, தாகம் தீவிரமாக இருக்கும். தலைமுடி மிருதுவாக செப்பட்டை நிறத்துடன் இருக்கும் பித்த மிகுதியால் விரைவில் நரைத்து விடும்.

பித்த பிரக்ருதி உடையவர்கள், தைரியசாலிகள், படிப்பில் ஆர்வம் உடையவர்கள். அதனால் அறிஞர்களாகவும், தேஜஸ்வீயர்களா கவும் காணப்படுவார்கள். மலம், சிறுநீர், வியர்வை என்ற மும்மலங்கள் அதிக அளவில்வெளிப்படும்தன்மை கொண்டவர்கள். ஏஸிஅறையில்கூட இவர்களுக்கு வியர்க்கும். சருமத்தில் வியர்வையின் துர்நாற்றம் இருக்கும். மிருதுவான தோல் உடையவர்கள். சுக்ல தாதுபலம் குறைவாகஇருக்கும். எனவே சந்ததிகள் குறைவாகவே இருக்கும்.

பித்த பிரக்ருதிகாரர்களுக்குத் தேகபலமும் நடுத்தரமாகவே இருக்கும். செல்வம், ஆயுள் போன்றவையும் மத்திமமாகவே அமையும். சள்ளென்று கோபம் வந்து விடும் இயல்புடையவர்கள். இவர்களதுஉடம்பும் வெப்பமானதாகவே இருக்கும். ஆதலால் இவர்களுக்கு இரத்தக் கொதிப்பு வரும் வாய்ப்பும் மிக அதிகம்.

பித்த உடம்புக்காரர்களுக்கு நகம் மிருதுவாக இருக்கும். பல் ஈறுகள் சீக்கிரத்தில் இரத்தம்கசியும்தன்மைகொண்டவை. உணவுப்பிரியர்கள். அதிகமாகச் சாப்பிடுவார்கள். பெண்களின் மாத விடாய் சீராகவும், அதிக நாள் நீடிப்பதாகவும் இருக்கும் குளிர்ச்சியான சூழ்நிலையைவிரும்புவார்கள். இவர்களது நாடித்துடிப்பு சமமானதாக இருக்கும்.

பித்த பிரக்ருதிகாரர்கள் தங்களைச் சார்ந்தவர்களிடம் அதிகபாசம் கொண்டவர்களாக இருப்பார்கள். வெகு சீக்கிரம் பழகிவிடுவார்கள். தேவைக்கேற்ப பணத்தைச் செலவு செய்வார்கள். இவர்களிடம் அதிகாரத் தன்மை இருக்கும். ஆதலால் இவர்கள் முதலாளிகளாகவோ, தலைவர்களாகவோ இருப்பர். பித்தத்தின்கோபத் தன்மையினால் ரஜோ குணத்துடனும் இணைந்து செல்லும் தன்மையுண்டு. சத்துவ குணத்துடனும் காணப்படுவர். எப்போதும்உடலும் மனசும் சுறுசுறுப்பாக இருக்கும். யாராவது மெத்தனமாக வேலை செய்தால் இவர்களு க்கு கோபம் வந்து விடும். நன் றாகத் தூங்கும் இயல்புடைய வர்கள். ஆனால்வேலை என்று வந்து விட்டால் இரவு முழு க்க விழித்திருந்து உற்சாக மாக வேலை பார்ப்பார்கள்.

உடல், மனம் இரண்டிலும் வேகம் கொண்டவர்கள் என்பதால் விளையாட்டு, நாட்டியம் போன்ற விடயங்களில் ஆர்வம் அதிகமாக இருக்கும். சீக்கிரமே கோபப்படுவார்கள் ஆனால் அதே வேகத்தில் சாந்தமாகி விடுவார்கள். புலி, கரடி, பூனை, குரங்கு போன்றவை பித்தத் தன்மையுடையவை.

பித்த பிரக்ருதியாக நீங்கள்இருந்தால், என்னென்ன ஆகாரம் சாப்பிடலாம். என்னென்ன தவிர்க்கலாம் எனத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

உண்ணத் தகுந்தவை

◆இனிப்பு,துவர்ப்பு, கசப்பு சுவையுள்ள உணவுகள்.

◆குளிர்ச்சியான ஆகாரங்கள், சைவஉணவு, அரிசி, கோதுமை, பார்லி

◆முட்டைக்கோஸ், கரட், பீன்ஸ், காளான்,தேங்காய் வெள்ளரி, உருளைக்கிழங்கு, கீரைகள், காலிஃப் பிளவர், பீற்றூட்,பட்டாணி, சோயா.

◆அப்பிள், தர்ப்பூசணி, மாதுளை, நெல்லிக்காய், பேரிச்சை, திராட்சை, செர்ரி.

◆ பசும்பால், ஆட்டுப்பால், பால் சார்ந்த உணவுகள், பாதாம், தேங்காய் எண்ணெய் (அளவுடன்)

◆ கொத்தமல்லி, கறிவேப் பிலை, கிராம்பு, ஏலக்காய், மஞ்சள் போன்றவற்றை அதிகமாகச் சேர்க்கவும்.

தவிர்க்க வேண்டியவை

◆ புளிப்பு, உப்பு, காரச் சுவையுள்ள உணவுகள்.

◆பூண்டு, வெங்காயம், தேன், நல்லெண்ணெய், எலுமிச்சை, மாம்பழம் மிதமாகப் பயன்படுத்தலாம்.


◆வெயிலில் அலைதல், அதிகமாகக் கோபப்படுதல், மதுபானம்போன்றவைகூடாது.

பித்தஆசாமிகளுக்குஎந்த விதமான நோய்கள் வரும் என பட்டியலிடலாமா? இரத்தக் கொதிப்பு, சரும நோய்கள், ஈரல் நோய்கள், மஞ்சள் காமாலை, மூலநோய், வாய்ப்புண், மூர்ச்சை போன்றவை வர வாய்ப்புண்டு.

நோயை எப்படித் தவிர்ப்பது?

குளிர்ச்சியான,இடங்களில் வசிப்பது மனதை சாந்தமாக வைத்துக் கொள்வது, நீச்சல் பயிற்சி, மிதமான ஆசனங்கள், தியானம், பிரார்த்தனை நன்மைபயக்கும்.

கப பிரக்ருதியும்



The Seven Chakras
Nadis or Nerve currents and Sushumna

அதன் குணாதிசயமும்

கப தத்துவம் கொண்டவர்களின் அங்கங்கள் பளபளப்பாகவும் மிருதுவானதாகவும் இருக்கும். சுக்ல தாது நிறைந்து காணப்படுவதால் சந்தான விருத்தி உண்டு. சரீரம் கனத்து பருமனாக இருக்கும். கபத்தின் மந்த குணத்தால் ஆகாரம், விகாரம், பேச்சு, செய்கை எல்லாவற்றிலும் மந்த கதியே காணப்படும். இவர்களின் தலைமுடி அடர்த்தியாகவும் நகங்கள் திடமாகவும் கண்கள் பெரியதாகவும் இருக்கும். பெண்களின் மாதவிடாய் சீரானதாக, குறைவாக இருக்கும்.

எந்தக்காலநிலையும் இவர்களுக்கு ஒத்துப்போகும். இவர்களில் நாடித்துடிப்பு மெதுவாகக் காணப்படும். ஆழ்ந்த உறக்கம் கொண்டவர்கள். ஜீரணசக்தி நன்றாக இருக்கும். தேவைக்கேற்றவாறே பேசும் தன்மைகள் கொண்டவர்கள். இவர்களுக்கு கோப தாபங்கள் ஏற்படுவதில்லை. உறுதி, திடத்தன்மை, பொறுமை, தெளிவுபோன்ற குணங்களும், உறுதியான உடலும் உடையவர். பசி, தாகம் குறைந்த அளவில் இருக்கும். வியர்வை அதிகமிராது தெளிவான பார்வையும் அழகிய முகத்தோற்றமும் சுப்ரமான குரலும் கொண்டிருப்பர். பொதுவாக இவர்கள் பலசாலிகளாகவும் சாந்த குணம்உள்ளவராகவும் தேஜஸ் வீயராகவும் படிப்பாளியாகவும் தீர்க்க ஆயுள் உள்ளவராகவும்இருப்பர்.மந்தகுணத்தால் தமோ குணமாகவோ ஸ்திர குணத்தால் சாத்வீகமாக வோ இருப்பர்.

எனவே அதிக நித்திரை உள்ளவர்கள். இவர்களுக்கு கபத் தன்மையுள்ள நோய் வந்தால் கடுமையாகப் பாதிக்கும். விரைவில் குணமடையாது. பொறுமை குணம் மிக்கவர். எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள்.

வாதம், பிரக்ருதியாளர்களைப்போல இவர்கள்உணர்ச்சிகளையும் ஆசை களையும் வெளிப்படுத்த மாட்டார்கள். ஆனால் உணர்ச்சிகள் கிளம்பி விட்டால் இவர்களால் அதைக் கட்டுபடுத்துவது சிரமம். மன உறுதி படைத்தவர்கள், கிடைத்ததைக் கொண்டு திருப்திப்பட்டுக்கொள்வார்கள். மாற்றம் என்பது இவர்களைப் பொறுத்தமட்டில் தேவையில்லாதது.

கபப்பிரக்ருதியின் ஆகாரங்கள் உண்ணத் தகுந்தவை

துவர்ப்பு, கசப்பு, காரம் சுவையுள்ள ஆகாரங்கள்

பார்லி, கொள்ளு

உலர்ந்த பழங்கள், அப்பிள் , அத்தி கத்தரிக்காய், முள்ளங்கி, பீன்ஸ், பூண்டு, வெண்டக்காய்,கீரைகள்,சோளம், இஞ்சி, பெருங்காயம், பெருஞ் சீரகம், ஓமம், கிராம்பு, மிளகு.

தவிர்க்க வேண்டியவை

◆இனிப்பு, புளிப்பு, உப்புச்சுவையுள்ள, ஆகாரங்கள்.

◆ எண்ணையில்வறுத்தவை

◆ தக்காளி, உருளைக் கிழங்கு, மாமிசம், நெய், தேங்காய், அரிசி, கோதுமை, தேன், பால்( குறைவாகப் பயன்படுத்தலாம்) மற்றும் பகல் உறக்கம், அதிக ஓய்வு போன்றவற்றை தவிர்த்தல் நன்று.

வரும் நோய்கள்

தோல் அரிப்பு, உடல் பருமன், உடலில் வீக்கம், உணவு செரியாமை, இருமல், சளி, இருதயம் மற்றும் கொழுப்பு சம்பந்தப்பட்ட நோய்கள்வரும்.

நோய் தவிர்க்கும் வழிகள்

உடற்பயிற்சி செய்வதும், பகல், தூக்கத்தைத் தவிர்ப்பதும் நல்லது.

இரட்டைத் தன்மைகள்

ஒருசிலருக்கு வாதம், பித்தம், கபம் இவற்றில் ஏதாவது ஒன்றின் தன்மை மட்டுமே அதிகமாக காணப்படும். அவர்கள் ஒரு விதத்தில் அதிர்ஷ்டசாலிகள். தங்கள் உடல் தரம் பற்றித்திட்ட வட்டமாக அறிந்து அதற் கேற்ப நடந்து கொள்ள முடியும். ஆனால் பலருக்கு இரண்டு தோஷங்கள். அதாவது வாத பித்தம், பித்தகபம், வாதகபம் என்று கலந்து காணப்படும். இவர்கள் இரட்டைத்தன்மைகொண்டவர்கள். சிலசமயங்களில் பிரச்சினை இல்லை. ஆனால் நம்மில்பெரும் பாலோர், இரட்டைப் பிரக்ருதி உடையவர்களே. இரண்டைப் பிரக்ருதி கொண்டவர்களின் குணங்களை பார்ப்போம்.

வாத-பித்த பிரக்ருதி

வாத-பித்த தன்மையுடையோர் வாத தோஷ த்தின் படி உஷ்ணத்தை விரும்பினாலும் அவர்களுடைய பித்த குணம் அதை அடக்கி விடும். பித்த குணம் நிறைய சாப்பிடுவதற்கு தூண்டினாலும் வாத குணம் இருப்பதால் ஜீரண சக்தி நிலையற்றதாக இருக்கும். உடல் தோற்றம் வாத பித்த தன்மையை வெளிக் காட்டும். வாதத்தின் சுருளும் பித்தத்தின் நீளமும் கலந்த தலைமயிர் அலை அலையாக காணப்படும்.

பிரச்சினை என்று வரும் போது பயமும் கோபமும் மாறிமாறி வரும். அதன் பயனாக ஆத்திரமும் அதிகாரமும் வெளிப்படும்.பித்தகுணம் அதிகாரத்தைக்கிளப்பும்போது வாத குணம் தன் சக்தியைப் பிரயோகித்து ஐயத்தை எழுப்பிவிடும். எனவே பலவீனமே வெளிப்படும்.

ஆரோக்கியமான வாத பித்த மனிதர்களுக்கு வாதத்தின் சுய சிந்தனைகளும் பித்தத்தின் செயற்படுத்தும் தன்மையும் இணைந்திருக்கும். வாதத்தின் எளிமையும் பித்தத்தின் வலிமையும் அவர்களின் பொதுக் குணமாக அமைந்திருக்கும். இந்த வலிமையை சுய முன்னேற்றத்திற்காக பயன்படுத்த வேண்டும். அல்லாவிடில்போதைப் பொருட்களில் நாட்டம் ஏற்பட ஏதுவாகும். வாதத்தையோ பித்தத்தையோ தனியாகக் கொண்டவர்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை. இரண்டுபிரக்ருதிகளும் இணைந் திருப்பவர்களுக்கு மட்டுமே இந்தப் பிரச்சினை. இனிப் புச் சுவை இவர்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

பித்த கப பிரக்ருதி

பித்த கப பிரக்ருதி உடையவர்கள்எந்நிலைமைக்கும் ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்வார்கள். கபத் தின் உறுதியும் பித்தத்தின் இணைந்து செல்லும் தன்மையும் தான் இதற்குக் காரணம். எல்லா வகையிலும் வெற்றி காண்பார்கள். பொதுவாக பித்த கப பிரக்ருதி உடையவர்களாகத் தான் இருப்பார்கள். பித்தத்தின் செயல் வேகமும் கபத்தின்வலிமையும்,இதைக்கவனித்துக் கொள்கிறது. பித்தத்தின் கோபத்தை கபத்தின் எச்சரிக்கை உணர்வு அடக்கி விடுகிறது. கசப்பு, துவர்ப்பு, சுவைகள் இவர்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

வாத கப பிரக்ருதி

வாதமும் கபமும் குளிர்ச்சியோடு சம்பந்தப்பட்டவை. எனவே வாத கப பிரக்ருதி கொண்டவர்கள், கபத்தின் ஆதரவால் தனிவாத பிரக்ருதி காரர்களைப் போல் அதிகக் குளிரால் அவதிப்படமாட்டார்கள். பித்த பிரக்ருதிகளைப் போல் சற்று உயரமாக சாதாரண உடல் கட்டுடன் காணப்படுவார்கள். அதிக உஷ்ணம் இல்லாததால் ஜீரண பிரச்சினைகள் ஏற்படலாம். கபம் கட்டுதல் போன்றவை நேரலாம்.


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

வாதகபபிரக்குருதிஉடையவர்கள் தங்கள் வேலையில் மிகவும் கவனமாக இருப்பார்கள் சற்று அதிகமாக என்று கூடச் சொல்லலாம். சிந்திக்காமலேயே முடிவுக்கு வந்து விடுவார்கள். கபத்தின்உணர்ச்சியும் வாதத்தின் தீவிர உழைப்பும் சேர்ந்து அவர்களை உணர்ச்சி மிக்கவர்களாக ஆக்கி விடும். சிறியபாதிப்பும்மனதில்ஆழமான விளைவை ஏற்படுத்தி விடும். இவர்களுக்கு எப்போதும்உஷ்ணம்தேவைப்படும். எனவே. இனிப்பு. கசப்பு போன்றவற்றை விட உப்பு, காரம் போன்ற சுவைகளே மிகவும் பிடிக்கும்.

யந்திரிபாத பிரக்ருதி

வாதம், பித்தம், கபம் மூன்றும் சேர்ந்து இருப்பது யந்திரிபாாத பிரக்ருதி. இவர்களிடத்தில் நோய் அண்டாது.நோய் வந்தால் சீக்கிரம் போகவும் செய் யாது.

உங்கள் பிரக்ருதியைக் கண்டுபிடிக்க ஒருசுலபமான வழி

பிரக்ருதியை ஆய்வுசெய்வதன் மூலம், நோய்க் காரணங்களை சுலபமாக கண்டறியலாம், அதன் மூலம் அக் காரணிகளை ஒதுக்கி நோய் அண்டவிடாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். இரசாயன சிகிச்சை(காயகல்பம்) மற்றும் வாஜீகரண சிகிச்சை (ஆண்மையைத் தூண்டி நன்மக்களை அளித்தல்)மூலம் ஆரோக்கியத்தை அதிகரிக்கலாம்தன்னுடைய பிரக்குருதி என்ன என்பதை அறிந்து கொண்டால் , ஒருவன் தனது தினசரி வாழ்க்கை முறையையும், கால மாற்றத்தின்போதுள்ளமுறைகளையும் அனுசரித்து அதற்குரிய அறிவுரைகளைக்கடைபிடித்து நோய் அண்டாமல் பார்த்துக் கொள்ளலாம். ஒருவனின் உடல் மற்றும் மனத்தின் சக்தி, திடசித்தம் உடம்பில் சகிப்புத் தன்மை, நோய் எதிர்ப்பு த்திறன் ஆகியவற்றை அறிந்து கொள்ள பிரக்குருதி உதவுகிறது. ஒருவரது பிரக்ருதியை தொடர்ந்து ஆய்வதன் மூலம் அவரது உணவு முறை, வாழ்கைமுறை, இவற்றைத் திருத்திக்கொள்ள முடியும். பொதுவாக கபப்பிரக்ருதி உள்ளவர்கள் அதிகம் சிரமப்படமாட்டார் கள் என ஆயுர் வேதம் கூறுகிறது.

(தொடரும்)

# சுயலாப வார்த்தை ஜாலங்களுக்கு எடுபட்டு எதிர்காலத்தை பாழாக்கிக் கொள்ள வேண்டாம்

## வட்டுக்கோட்டையில் டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

சுயலாப அரசியல் வாதிகளின் வார்த்தை ஜாலங்களுக்கு எடுபட்டு எதிர்காலத்தில் உங்களது வாழ்வை பாழாக்கிக் கொள்ளவேண்டாம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வட்டுக்கோட்டை துணவி கிராம மக்களை சந்தித்து கலந்துரையாடிய போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் காலங்களில் சுயலாப அரசியல் வாதிகள் தமது சுயநலன்களை முன்நிறுத்தியதாகவும் தேர்தல் வெற்றியை இலக்காக் கொண்டும் பல்வேறு வாக்குறுதிகளுடன் இங்கு வருவார்கள்.

அவ்வாறு வருபவர்கள் உங்களுக்கு வார்த்தை ஜாலங்களை வழங்கி மகிழ்வித்தும் குளிர்வித்தும் உணர்ச்சியூட்டுவார்கள். அவற்றில் மயங்கி நீங்கள் வாக்களித்து அவர்கள் வெற்றி பெறும் சந்தர்ப்பங்களின் பின்னர் உங்களை நாடி ஒரு போதும் வருவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளீர்கள். ஆனால் நாம் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை தீர்த்து வைக்கும் பொருட்டு எப்போதுமே உங்களுடனேயே வாழ்ந்து வருகின்றோம். ஆதலால் மக்களுடன் நின்று மக்களுக்கு சேவை புரிபவர்களை நீங்கள் உங்கள் அரசியல் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் நீங்கள் எதிர்கொள்கின்ற வாழ்வாதாரம் உள்ளிட்ட ஏனைய அபிவிருத்தி பணிகளையும் முன்னெடுத்து அதனூடாக வாழ்க்கையிலும் நீங்கள் சார்ந்து வாழும் சமூகத்திலும் பாரிய மாற்றத்தை கொண்டு வர முடியும் என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். இம் மக்கள் சந்திப்பில் மக்கள் வீடமைப்பு வசதி ,குடிநீர், வீதிபுனரமைப்பு,கோயில் புனரமைப்பு உள்ளிட்ட தமது தேவைகள் தொடர்பில் டக்ளஸ் தேவானந்தாவின் அவதானத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

கோரிக்கைகளை கேட்டறிந்து கொண்ட செயலாளர் நாயகம் முன்னுரிமை அடிப்படையில் தேவைகளுக்கு உரிய தீர்வுகளை பெற்றுத் தருவதற்கு முழுமையான முயற்சிகள் முன்னெடுக்கப் படும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாகச்செயலாளர் சிவகுரு-பாலகிருஸ்ணன்(ஜீவன்), கட்சியின் வலிகாமம் மேற்கு நிர்வாகச் செயலாளர் செல்வகுமார் ஆகியோர் உடனிருந்தார்.(இ-7)

## வீட்டிற்கான உரிமைப்பத்திரங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீட்டுத்திட்ட பயனாளிகளிற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனால் யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து வீட்டிற்கான உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. (இ-7)

# பேக்கரியில் திருடிய உரிமையாளர் கைது

(ஏறாவூர்)

ஏறாவூர் நகரில் உள்ள பேக்கரியொன்றில் பணத் திருட்டில் ஈடுபட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த மற்றுமொரு பேக்கரி உரிமையாளரை கைது செய்துள்ள தாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை சி.சி.ரி.வி காட்சியின் உதவியுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர், காதியார் வீதியை அண்டியுள்ள பேக்கரி ஒன்றிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகலளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் அந்த பேக்கரியில் இருந்த பலவகையான கேக் வகைகளினதும் விலையை கேட்டு விட்டு, தனக்கு உயர் ரக கேக் ஆறரைக் கிலோ தருமாறும் அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிப் பொதியிடுமாறும் கேட்டுள்ளார்.

வாடிக்கையாளர் கேட்டதற்கேற்ப ஏறாவூர் பேக்கரி உரிமையாளர் கேக்கை நிறுத்தெடுத்து பின்பக்க மாகவுள்ள பகுதியில் அவற்றைச் சிறு துண்டுகளாக வெட்டி பொதியிடத் தயாரான போது. கேக் வாங்க வந்த நபர் தான் அடுத்த கடையில் கடதாசி வாங்க வேண்டியிருப்பதால் அங்கு சென்று வருவதாகக் கூறியுள்ளார்.

சிறிது நேர இடைவெளியில் சிறுமி ஒருத்தி வந்து நொறுக்குத் தீனிப் பக்கெற் வாங்கிக் கொண்டதும் அந்தப் பணத்தை கல்லாப் பெட்டியில் இடுவதற்கு பேக்கரி உரிமையாளர் முனைந்த போது அதிலிருந்த சுமார் 35 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டு கல்லாப்பெட்டி காலியாகி இருந்தது தெரியவந் துள்ளது.

இதனிடையே கேக் வெட்டிப் பொதி செய்யுமாறு கேட்ட வாடிக்கையாளரான நபர் திரும்பி வரவேயில்லை.

இந்நிலையில் சி.சி.ரி.வி காட்சியை சோதித்தபோது கேக் வெட்டிப் பொதியிடுமாறு கூறிய சந்தேக நபரே திருட்டில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

குறித்த சந்தேக நபர் வாழைச்சேனையிலும் இன்னும் சில இடங்களிலும் உள்ள பேக்கரிகளில் இதுபோன்ற பணத் திருட்டுக்களில் ஈடுபட்டிருப்பது ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுமார் 40 வயது மதிக்கத்தக்க இந்த சந்தேக நபருக்கு மட்டக்களப்பு நகரில் சொந்தமாக ஒரு பேக்கரி இருப்பதும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் பொலிஸார் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்வருகின்றனர். (இ-7)

## வாழ்வாதார உதவி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

லண்டன் வாழ் சமூக சேவையாளருமான குருபரன் யாழ். எய்ட் ஊடாக விசேட தேவையுடைய பிள்ளைகளைக் கொண்ட பொருளாதார ரீதியாக பின் தங்கிய குடும்பம் இரண்டிற்கும் மற்றும் முன்னாள் போராளிக் குடும்பத்திற்கும் வாழ்வாதார உதவியாக பசு மாடும் கன்றும் வழங்கியதுடன் தாயகம் எங்கும் பசுமையின் விடியல் செயற்றிட்டத்தின் கீழ் பயன்தரு மரக்கன்றுகளும் நாட்டி வைத்துள்ளார். (இ-7)



ஊர்காவற்றுறை சென்.மேரிஸ் மகளிர் கல்லூரிக்கு வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2017ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கீட்டின் கீழ் ரூ.70,000/= பெறுமதியானபிளாஸ்டிக் கதிரைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

## நெல்லியடியில் வடிகான்கள் சேதம் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பு



(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியிலுள்ள வடிகான்கள் சேதமடைந்த நிலையில் இருப்பதால் இவ் வீதியால் பயணம் செய்யும் பொது மக்கள் விபத்துக்குள்ளாகும் அபாயம் இருப்பதாகவும் வாடிகான்களுக்குள் மழை நீர் உட்புகுந்து நுளம்புப் பெருக்கம் அதிகரித்திருப்பதாக பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு சேதமடைந்துள்ள வடிகான்களை மிக விரைவில் சீர் செய்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-60)

## கொழும்பு - கண்டி வீதியில் அச்சத்தை ஏற்படுத்திய கால்கள்



கொழும்பு - கண்டி பிரதான வீதியில் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

மாவனல்ல இலங்கை போக்குவரத்து சபைக்கு அருகிலுள்ள வாய்க்கால் ஒன்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலத்தின் கால்கள் மாத்திரம் வெளியில் தெரிந்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் சென்ற பலர் அச்சமடைந்துள்ளனர்.

குறித்த நபர் வாய்க் காலிற்குள் விழுந்து உயிரிழந்துள்ளாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது கிடைத்துள்ள தகவல்களுக்கமைய இந்த நபர் மானவல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் மாவனல்ல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர்.(இ-7)

# சிம்பாவேயின் துணை ஜனாதிபதி நீக்கம்



சிம்பாவேயின் துணை ஜனாதிபதியான எம்.மெர்சன் மனங்கவ்வா (Emmerson Mnangagwa) பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நம்பிக்கையான முறையில் தனது கடமையை நிறைவேற்றத் தவறியமை மற்றும் கீழ்ப்படியாமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவரை, துணை ஜனாதிபதிப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி ரொபர்ட் முகாபே நேற்று முன்'னம் திங்கட்கிழமை நடவடிக்கை எடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சிம்பாவேயின் துணை ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜோய்ஸ் முஜ'ருவுக்க (Joice Mujuru) எதிராக ஆட்சிக் கவிழ்ப்பு செய்ய முற்பட்டமை மற்றும் பிரிவினைவாதத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரோஹிஞ்யாக்களுக்கு எதிரான வன்முறை குறித்து விசாரணை



ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், ராஹினி மாநிலத்தில் இராணுவ நடவடிக்கை அதிகளவில் இடம்பெறவில்லையென பதை மியன்மார் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச்சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது மியன்மார் அரசாங்கத்திடம், பாதுகாப்புச் சபைத் தலைவர் (SEBASTIANO CARDI) இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். (இ-7)

# பாரதம்

# 'பாரடைஸ்' ஆவணங்கள் கசிவு எலிசபெத் ராணியும் உள்ளடக்கம்



(இஸ்லாமாபாத்)

'பாரடைஸ் பேப்பர்ஸ்' ஆவணங்களின் பட்டியலில் 2004 - 2007 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானில் பிரதமராக இருந்த சவுக்கத் அஜிஸ் பெயர் இடம் பெற்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாடுகளிலுள்ள வரிச்சலுகையை பயன்படுத்தி பிரபலங்கள் பலரும், வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச புலனாய்வு பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு, 95 ஊடகபங்குதாரர்கள்பாரடைஸ் பேப்பர்ஸ் என்ற பெயரில் ஆவணங்களை வெளியிட்டுள்ளனர்.

இதில் உலகத் தலைவர்கள், தொழில் அதிபர்கள், கம்பனிகள் என 31 ஆயிரம் பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த பட்டியலில் 2004 - 2007 ஆம் ஆண்டுகளில் பாகிஸ் தானில் பிரதமராக இருந்த சவுக்கத் அஜிஸ் பெயர் இடம் பெற்றிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

இவர் தனது மனைவி, குழந்தைகள், பேரக்குழந்தை ஆகியோரின் பெயரில் அமெரிக்காவில் டெலாவரே மாகாணத்தில் உருவாக்கியுள்ள அண்டார்க்டிக் அறக்கட்டளை நிறுவி, அதன் வாயிலாக முதலீடுகள் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் தனியார் எஸ்டேட்டும் இந்த 'பாரடைஸ் பேப்பர்ஸ்' ஆவணங்களில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த தனியார் எஸ்டேட் சார்பில் பல இலட்சம் பவுண்டுகள், வெளிநாடுகளில் உள்ள வரிச்சலுகையை பயன்படுத்தி முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# இரட்டை இலை விவகாரம்; விசாரணை ஒத்திவைப்பு

(டில்லி)

அ.தி.மு.கவிலுள்ள இரு அணிகளில் இரட்டை இலை சின்னம் யாருக்கு? என்பது தொடர்பான விசாரணையை ஒத்திவைப்பதாக தலைமை தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.கவில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் ஒரு அணியினரும், டி.டி.வி தினகரன் தலைமையில் ஒரு அணியினரும் செயற்பட்டு வருகின்றனர்.

இரட்டை இலை சின்னத்தை தங்களுக்கே வழங்க வேண்டும் என இரு தரப்பினரும் தேர்தல் ஆணையத்தை நாடினர்.

இரு தரப்பிலும் பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட ஆவணங்கள், பிரமானப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஏற்கனவே, ஐந்து கட்டமாக விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் ஆறாவது கட்டமாக விசாரணை நடைபெற்றது. இதில், இரு தரப்பினரும் தங்களது வாதங்களை முன்வைத்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் விசாரணையை ஒத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நாளை மறுதினம் 10 ஆம் திகதிக்குள் இறுதி முடிவு எடுக்க முடியாது என்பதால் கூடுதல் கால அவகாசம் கேட்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# பத்து மாதங்

# அமெரிக்காவி



வானுயர்ந்த கட்டடங்கள், மேம்பட்ட கலாசாரம், வலிமையான இராணுவம் என அமெரிக்கா மீது உலகம் வைக்கும் பார்வை எப்போதுமே உயர்வானவை.

இருப்பினும், அங்கு அடிக்கடி நடைபெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அமெரிக்கா மீதான பார்வையில் பயத்தை கொடுக்கிறது.

நாகரிகத்தில் மேம்பட்டு இருந்தாலும் எதற்காக இப்படி சிலர் துப்பாக்கிகளைக் கொண்டு அப்பாவிகளைக் கொன்று வருகின்றனர்? என்ற கேள்வி எழாமல் இல்லை.

டெக்ஸாஸ் மாகாணத்திலுள்ள சுதர்லாண்ட் என்ற பகுதியில் தேவால

# கொரிய தீபகற்ப விவகாரம்; உதவியை எதிர்பார்க்கின்றோம்

## சீனா அறிவிப்பு

(பீஜிங்)

கொரிய தீபகற்பத்தில் நிலவும் பதற்ற நிலைமையைக் கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பினர்களிடமும் உதவியை எதிர்பார்த்துள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.




பீஜிங்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே, சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'வட கொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுதத்திறன்களை வளர்த்துக்கொள்ளும் நடவடிக்கையால், கொரிய தீபகற்பத்தின் மீதான நிலைமை மிகவும் சிக்கலாகவுள்ளது. எனவே, கொரிய தீபகற்பத்தில் நிலைமையைச் சீராக்குவதற்காக அனைத்துத் தரப்பினர்களும் முன்வர வேண்டுமென்று நாம் எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

வட கொரியாவின் அச்சுறுத்தலை சமாளிக்க, சுமுகமான முறையில் கலந்துரையாடி தீர்வு காணப்பட வேண்டும்' எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடகொரியாவானது, ஏவுகணைத் தாக்குதல் நடத்தினால், ஜப்பானால் சுட்டு வீழ்த்தப்படுமென்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, சீனாவின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது. (இ-7)

# உ.பியில் தொட

# 58 குழந்தைக

(உத்தரபிரதேசம்)

வட இந்தியாவின் உத்தரப்பிரதேச அரச வைத்தியசாலையில் கடந்த நான்கு நாட்களில் 58 குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேசம் கோரக்பூர் வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை பாபா ராகவ்தாஸ் கல்லூரியின் விரிவுரையாளர் டி.கே. ஸ்ரீவத்சவா நேற்று முன்தினம் உறுதி செய்துள்ளார்.

இதில் 32 குழந்தைகள் ஒரு மாதத்திற்கு உட்பட்டவர்கள் எனவும்,

# தென்கொரியா

(வோஷிங்டன்)

முதற்தடவையாக ஆசிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை ஆரம்பித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஜப்பானுக்கான விஜயத்தை முடித்துக்கொண்ட நிலையில், தென்கொரியாவுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை புறப்பட்டுச் சென்றார்.

தென்கொரியாவுக்கான இவரது விஜயத்தின்போது, வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுதத்திட்டம் தொடர்பில் அவர் கவனம் செலுத்துவாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் தொடரும் மழையால் தாழ்நில மக்கள் கடும் பாதிப்பு



(சென்னை)

சென்னை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில், கடும் மழை பெய்துள்ளமையினால், தாழ் நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை ஆரம்பித்துள்ளதால், கடந்த ஒக்டோபர் 27ஆம் திகதி முதல், அடைமழை தொடர்ச்சியாக பெய்து வருகின்றது.

இது குறித்து கருத்து தெரிவித்த வானிலை மையத்தின் இயக்குநர் பாலச்சந்திரன்,

குறித்த பருவ மழை, நாளை 9 ஆம் திகதி வரை பெய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இதனால் தமிழக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மழை குறைந்துள்ள நிலையிலும், அடுத்த 24மணி நேரத்தில் கடும் மழை பெய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளமையினால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

மேலும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்னும் இரண்டுநாட்களுக்கு கனமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வெளிநாடு

# ங்களில் 13 ஆயிரம் பேர் வில் துப்பாக்கிச்சூட்டில் பலி!

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு



*(வோஷிங்டன்)*

**அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் கடந்த பத்து மாதங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 13,149 பேர் உயிரிழந் துள்ளனர் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.**

யத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட் டுள்ளனர்.

இதேவேளை அமெரிக்காவில் இந்த ஆண்டில் மட்டும் சுமார் 52, 385 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இதில் 13,149 பேர் உயிரிழந் துள்ளனர். இதில், 307 சம்பவங்கள் பெரியது என குறிப்பிடப்பட் டுள்ளன.

தீவிரவாதத்தை விட அமெ ரிக்காவுக்கு பெரிய தலை வலியை கொடுப்பது உள்நாட் டில் மக்களோடு மக்களாக கலந்திருக்கும் துப்பாக்கிகள் தான்.

2014ஆம்ஆண்டுக்கு பின் னர் தீவிரவாதிகளால் நடத் தப்பட்ட தாக்குதலில் 103 பேர் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த வர்களை கணக்கிட்டால் இது வெறும் ஒரு சதவிகிதம் தான்.

இவ்வளவு பேர் மாய்ந்தா லும், துப்பாக்கிகளால் பிரச் சினை இல்லை. அதனை கையாளும் மனநிலை பாதிக் கப்பட்டவர்கள் தான் பிரச் சினை என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித் துள்ளார்.

அமெரிக்கர்கள் தங்களது பாதுகாப்புக்கு துப்பாக்கிகள் வைத்துக்கொள்ளலாம் என் கிறது சட்டம். ஆனால், அதே துப்பாக்கிகள் மற்றவர்களின் உயிரைக் குடிக்கும் போது, இதில் எங்கே இருக்கிறது பாதுகாப்பு? என்ற கேள்வி எழாமல் இல்லை.

துப்பாக்கி கலாசாரம் எனும் வார்த்தையை உலகிற்கு நல்கிய அமெரிக்காவில் யார் வேண்டுமானாலும் துப்பாக்கி வைத்திருக்கலாம் என்ற நிலை இருக்கும் வரை இந்த ஆயுத பசிக்கு முடிவு என்பது இல்லையென சர்வதேச ஊட கங்கள் சுட்டிக்காட்டியுள் ளன. (இ-7)

## டரும் அதிர்ச்சி கள் உயிரிழப்பு

ஏனைய 26 குழந்தைகளும் ஒரு மாதத்திற்கு மேற்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த இரண்டு மாதங்க ளுக்குள் 105 குழந்தைகள் உயிரிழந் திருப்பதாகவும், இவர்கள் மூளை வீக்கம் உட்பட மேலும் பல காரணி களினால் உயிரிழப்பதாகவும் தெரிவி த்துள்ளார்.

அத்துடன் இவ் உயிரிழப்பிற்கு குறித்த வைத்தியசாலையில் வைத் தியர்கள் மற்றும் மருத்துப் பற்றாக் குறையே காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (இ-7)

## யாவில் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் வார்த்தைப் பிரயோகங்கள், கொரிய தீபகற்பத்தில் மோதலுக்கான நிலை மையை ஏற்படுத்துமென்று பல நாடு கள் அஞ்சுகின்றன.

இருப்பினும், வடகொரியாவின் ஏவு கணை மற்றும் அணுவாயுதத்திட்டம் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள பதற் றமான சூழ்நிலையை கட்டுப்படுத்தும் வகையில் தீர்க்கமான நடவடிக்கை யில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஈடு படுவாரென அமெரிக்க வெள்ளை மாளிகை கூறியுள்ளது. (இ-7)

# வடகொரியாவின் ஏவுகணைகளை அமெரிக்க ஆயுதங்கள் மூலம் ஜப்பான் விரட்டியடிக்கும்!

## ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி

(டோக்கியோ)

வடகொரியாவின் ஏவு கணைகளை அமெரிக்க ஆயு தங்கள் மூலம் வானத்தை விட்டு ஜப்பான் விரட்டி அடிக் கும் என ஜப்பான் சென்று ள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கவின் ஜனாதி பதியாக பொறுப்பேற்ற பின் னர் கிழக்காசிய நாடுகளுக்கு முதன் முறையாக டொனால்ட் ட்ரம்ப் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ளார். ஜப்பான், தென்கொரியா, சீனா ஆகிய நாடுகளுக்கு செல்லும் அவர் வியட்நாம் மற்றும் பிலிப் பைன்ஸில் நடைபெறவுள்ள ஆசிய ஒத்துழைப்பு உச்சி மாநாடுகளில் பங்கேற்கிறார்.

தனது பயணத்தில் முதல் நாடாக ஜப்பான் சென்றுள்ள ட்ரம்ப் அந்நாட்டின் பிரதமர் ஷின்சோ அபே உடன் பேச்சு வார்த்தை நடத்தினார். பேச் சுவார்த்தையின் போது வட கொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்ட தாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் ட்ரம்ப் - அபே இரு வரும் கூட்டாக செய்தி யாளர்களைச் சந்தித்தனர். அப்போது, 'வடகொரியாவின் எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள ஜப்பான் முழு அளவில் தயாராகவுள்ளது. தேவைப்பட்டால் வடகொரியா வின் ஏவுகணைகளை வீழ்த்து வோம்.

அமெரிக்காவிடமிருந்து பெரிய தொகைக்கு இராணுவ உபகரணங்கள் வாங்கப்பட வுள்ளன என ஜப்பான் பிரத மர் ஷின்சோ அபே கூறினார்.

இதனையடுத்து பேசிய ட்ரம்ப்,

அமெரிக்காவிடமிருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் மூலம் வடகொரியாவின் ஏவுகணைகளை ஜப்பான் வானத்தை விட்டு வெளியே விரட்டியடிக்கும் என குறிப்பிட் டார்.

மேலும், 'ஜப்பான் மற் றும் தென்கொரியா அதிகள விலான நவீன ஆயுதங் களை வாங்குவதற்கு அனு மதி அளித்துள்ளோம் என தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இரண்டு முறை ஜப்பான் பகுதிகளுக்கு மேலாக தனது ஏவுகணைகளை வடகொரியா சோதித்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# இந்தியாவுக்கு சீனா எதிர்ப்பு



(பீஜிங்)

இந்திய பாதுகாப்பு அமைச் சர் நிர்மலா சீதாராமன் அரு ணாச்சல பிரதேசத்திற்கு மேற்கொண்ட பயணத்திற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்து ள்ளது.

நிர்மலா சீதாராமன் இரண்டு நாள் பயணமாக அருணாசல பிரதேசத்துக்கு கடந்த ஞாயிற் றுக்கிழமை சென்றார். இந் தியா-சீனா எல்லை கட்டுப் பாட்டு கோடு அருகே அஞ்சா மாவட்டம் கபிது என்ற பகுதி யிலுள்ள இந்திய இராணுவ நிலைகளுக்குச் சென்று இரா ணுவ வீரர்களுடன் உரையாடி னார். அவர்களது அர்ப்பணிப்பு உணர்வைப் பாராட்டினார்.

இதற்கிடையே, அரு ணாச்சல பிரதேசத்தை சீனா தெற்கு திபெத் எனக்கூறி உரிமை கொண்டாடி வரு கிறது. ஆனால் அருணாச் சல பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிதான் என்று இந்தியா திட்டவட்ட மாக தெரிவித்துள்ளது. இந் தியாவின் கருத்தை கணக் கில் எடுத்துக் கொள்ளாத சீனா, தொடர்ந்து அருணாச்சல பிர தேசத்திற்கு முக்கிய தலைவர் கள் செல்லும் போது எதிர்ப்பு தெரிவிப்பதை வாடிக்கை யாக கொண்டுள்ளது.

இந்நிலையில அமைச் சர் நிர்மலா சீதாராமனின் அருணாச்சல பிரதேச பய ணத்திற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹூவா சான் யிங் கூறுகையில்,

சீனா - இந்தியா எல்லை யில் கிழக்கு செக்டாரில் பிரச் சினையுள்ளது. பிரச்சினைக் குரிய இந்தப் பகுதிக்கு இந் திய தரப்பில் இருந்து பயணம் மேற்கொள்ளப்பட்டது அமை திக்கு உகந்தது கிடையாது.

எல்லையில் அமை தியை பராமரிக்க இந்தியா வும் சீனாவும் இணைந்து பணியாற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# கார்லெஸ் விடுவிப்பு



(பிரேசில்)

காட்டலோனியா தலை வர் கார்லெஸ் மற்றும் 4 முன்னாள் அமைச்சர்களை பெல்ஜியம் நீமன்று விடு விக்க உத்தரவிட்டுள்ளது.

ஸ்பெயினில் தன்னாட்சி அதிகாரம் பெற்ற காட்டலோ னியா மாகாணம் சுதந்திரம் கேட்டு மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தியது.

அதில் வெற்றி பெற்று தனிநாடு என அறிவிக்கப்பட் டது. அதை ஏற்காத ஸ்பெ யின் பிரதமர் மரியானோ ராஜேஸ் காட்டலோனியா பாராளுமன்றத்தை கலைத்து அதை ஸ்பெயினின் நேரடி மேற்பார்வையில் கொண்டு வந்தார்.

அதைத்தொடர்ந்து காட்ட லோனியா தலைவர் கார் லெஸ் மற்றும் 4 முன்னாள் அமைச்சர்கள் பெல்ஜியத் திற்குச் சென்றனர். எனவே அவர்களை கொண்டு வர ஐரோப்பிய யூனியன் கைது பிடியாணை பிறப்பித்தது.

இந் நிலையில் கார்லெஸ் பொலிஸில் சரணடைந்தார். இதை விசாரித்த பெல்ஜியம் நீதிமன்று காட்டலோனியா தலைவர் கார்லெஸ் மற்றும் 4 முன்னாள் அமைச்சர் களை பிணையில் விடுவித் தது.

மேலும் அமைச்சர்களை உடனடியாக ஸ்பெயினுக்கு அனுப்ப வேண்டியதில்லை என்றும், 15 நாட்களில் பெல் ஜியம் நீதிமன்றில் ஆஜராக வும் உத்தரவிட்டது.

நேற்று முன்தினம் மாலை கார்லெஸ் பொலி ஸில் சரணடைந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிய நிர்வாகக் கட்டமைப்பு குறித்து அரசாங்கம் சிந்திக்கிறது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

சில உள்ளூராட்சி மன்றங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து. மாநகர அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படக்கூடிய புதிய நிர்வாக கட்டமைப்புத் தொடர்பில் அரசாங்கம் சிந்தித்து வருகிறது. இவை, தேசிய கட்டமைப்புக்கு அமைய செயற்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிற்றிநெட் காங்கிரஸின் திறப்பு விழாவின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொதுவான நீர் விநியோகம், கழிவுநீரகற்றல் போன்ற சேவைகளை வழங்க பொதுவான உட்கட்டமைப்புகளையிட்டு நாம் சிந்திக்கலாம்.

நாம் மேல் மாகாண சபையுடன் வேலை செய்யலாம். பின்னர் தேசிய கொள்கைகளுக்கு அமைய வெவ்வேறு உள்ளூராட்சி மன்றங்களால் நிர்வாகம் செய்யப்படலாம்.

மாகாண சபைகள், கல்வி, சுகாதாரம் போன்றவற்றைக் கவனிக்கும் வேளையில் உள்ளூராட்சி மன்றங்கள் தேசிய கொள்கைகளுக்கு அமைய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும். இந்தக் கொள்கைக் கட்டமைப்பு மேல் மாகாண சபையுடன் கலந்து பேசி உருவாக்கப்படும். நாம் ஒன்றிணைந்த மாநகர நிர்வாகத்திலிருந்து விடுபட்டு பல சிறு அலகுகளின் நிர்வாகத்துக்கு மாறவுள்ளோம்.

இணையக் கூட்டில், சகல சேவைகளும் தனித் தனியாகச் செயற்படும். மாநகர சபைகள் மக்கள் தொடர்பான அன்றாடத் தீர் மானங்களை எடுக்கும். நாம் அபிவிருத்தியை முன் னெடுப்பதற்கான எமது சிந்தனை இதுவாகும். நகரங்களை நிர்வகிக்க புதிய வழிகளை நாம் தேடுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# அமெரிக்க அரசியல் விவகார உதவிச்செயலர் பிரதமர், வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு இரண்டு நாட்கள் பயணமாக வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு வந்த, அமெரிக்காவின் உதவிச் செயலர் தோமஸ் சானொன், அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, சுதந்திரமான, திறந்த இந்தோ - பசுபிக் பிராந்தியத்தை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப்பும் பங்கேற்றிருந்தார்.

இதையடுத்து வெளிவிவகார அமைச்சுக்குச் சென்ற தோமஸ் சானொன், வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (இ-7)



# எரிபொருள் முற்றாகத் தீர்ந்தது

(கொழும்பு)

தம்புள்ளை முதல் மாத்தளை வரையான வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அனைத்திலும் எரிபொருள் முற்றாக தீர்ந்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் கடந்த சில நாட்களாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவியதுடன், எரிபொருளைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையும் காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் குறித்த எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் முற்றாக தீர்ந்துள்ளதென முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் இல்லாததால், பொதுமக்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கும் ஊழியர்களுக்கும் இடையில், நாவுலவில் நேற்று வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. எனினும் பொலிஸாரின் தலையீட்டின் பின்னர், அம் முரண்பாடு தீர்க்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியன் ஓயில் கம்பனியின் பெற்றோல் தொகுதியொன்று தரம் குறைவானது என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து. இலங்கை முழுவதிலும் ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாடு இப்பகுதிகளையும் தொடர்ந்து தாக்கி வருகிறது. இந் நிலைமை எப்போது சரியாகுமெனத் தெரியவில்லை என எரிபொருள் நிலைய முகாமையாளர்கள் தெரிவித்தனர். (இ-7)

# 15 ஆயிரம் தொன் பெற்றோலை இந்தியாவிலிருந்து விநியோகிக்க லங்கா ஐஓசி அவசர நடவடிக்கை

(கொழும்பு)

லங்கா ஐஓசி நிறுவனம், அவசரமாக 15 ஆயிரம் தொன் பெற்றோலை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்தே இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் 16 வீத எரிபொருள் விற்பனைச் சந்தையை தம்வசம் வைத்திருக்கும் லங்கா ஐஓசி நிறுவனம், அவசரமாக பெற்றோலை இலங்கைக்கு விநியோகிப்பதற்கு பல்வேறு விநியோகஸ்தர்களையும் தொடர்பு கொண்டுள்ளதாக அதன் முகாமைப் பணிப்பாளர் சியாம் போரா தெரிவித்துள்ளார்.

நாளை 9 அல்லது 10ஆம் திகதி இந்த பெற்றோல் இலங்கையை வந்தடையும் என்றும் அவர் கூறினார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## இயலாதவர்கள் என்றால் இளக்காரமா?

வெளிநாட்டவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் என்று ஒரு பெரிய பட்டியலே இடலாம். அவற்றுள் ஒன்றை இப்போது சொல்லலாம் என்று தோன்றுகிறது.

நான் சொல்லப் போவது வெளிநாட்டுக்காரர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவற்றிலேயே மிகவும் தலையாயது.

அது மனிதர்களை மனிதர்களாக நடத்துவது.

வயதில் குறைந்த முதலாளி மகன், பண்ணையில் அல்லது வீட்டில் வேலை பார்க்கும் மூத்த வயதினரைக் கூட டேய், வாடா இங்கே! என்பான். நமக்கு சுரீர் என்று இருக்கும்.

இவர் அரசு உயர் அதிகாரியாக இருப்பார். தனக்குக் கீழே வேலை பார்ப்பவரை இவர் ஏதோ சொந்த வேலைக்காரனைப் போல நடத்துவார். கண்டபடி ஏசுவார் மனத்தைப் புண்படுத்துவார்.

வீட்டில் பைப் ரிப்பெயர் சரி செய்ய வந்த பிளம்பரை வீட்டுக்கார அம்மா ஏதோ தன்னுடைய நிரந்தர ஊழியரைப் போல் மட்டமாக நடத்துவார். இதெல்லாம் கூடப் பரவாயில்லை என்று சொல்லுமளவுக்கு வசதி படைத்த உறவினர்களையும் வறுமை பீடித்த உறவினர்களையும் அப்பட்டமாக வித்தியாசம் தெரியும்படி நடத்துகிறவர்கள் இருக்கிறார்கள்.

என்னது ! எல்லாரையும் ஒரேமாதிரி நடத்துவதா? இதென்ன பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே! என்று அவசரப்பட்டு வாதிட முன்வருகிறவர்களுக்கு ஒருசில கண்ணோட்டங்களை மட்டும் சொல்லப் பிரியப்படுகிறேன்.

எல்லாரும் ஒரேமாதிரி நடத்தப்பட வேண்டும் என்கிற அவசியமே இல்லை. ஆம்! நம்மிடம் அதிகமாக அன்பு செலுத்துகிற நண்பர்களையும் சுரண்டி வாழ்வதுதான் நட்பு என்று எண்ணுகிறவர்களையும் எப்படி ஒரேமாதிரி நடத்த முடியும்? நமக்கு மறக்க முடியாத உதவிகளைச் செய்தவர்களையும் நம்மிடம் உதவிகளைப் பெற்றுவிட்டு நன்றி விசுவாசம் இல்லாமல் இருப்பவர்களையும் எப்படி ஒரேமாதிரி நடத்த முடியும்? முடியவே முடியாது.

ஆனால் வேறுபாடு காட்டி நடத்துகிறவர்கள் ஒரு விடயத்தை மட்டும் மறந்து விடுகிறார்கள்.

நம் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவர்களை எவ்வளவு பிரியமாக வேண்டுமானாலும் நடத்தலாம். ஆனால் நம் பிரியத்திற்கு அப்பாற்பட்டவர்களை அவர்களும் மனிதர்கள் என்கிற நினைப்பு இல்லாமல் நடத்தி விடக் கூடாது. இன்னும் தெளிவுடச் சொல்ல வேண் டுமானால் பிரியம் என்பதே மற்றவர்கள் எதிர்பார்ப்பைவிட அதிகமாக இருக்க வேண்டும்.

மனிதாபிமானம் என்பது எல்லாவற்றையும் விடத் தலையாயது. மற்றவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தும் போது அவர்கள் உயர்ந்து விடுவதாகவும் தாங்கள் இறங்கிப் போய் விடுவதாகவும்பலர் நினைக்கிறார்கள். இது ஒரு தவறான நினைப்பு.

மற்றவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துவது என்பது நம்மைப்பற்றி பிறர் உயர்வாகக் கருதுவதற்கும் நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்கும் கிடைக்கிற வாய்ப்பே தவிர வேறல்ல!

**லேனா தமிழ்வாணன்**

# ஐ.நா.அமைதிப்படையில் இலங்கை இராணுவத்தினர்

## ஹரி ஆனந்தசங்கரி எதிர்ப்பு



(கொழும்பு)

இலங்கைப் படையினர் ஐ.நா. அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கு கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணிகளில் இலங்கை அரசாங்கப் படையினர் அங்கம் வகிப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கப் படையினர் தொடர்ந்தும் வடக்கு தமிழ் மக்களின் உரிமைகளை முடக்கி வருகின்றனர். இலங்கையின் வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தில் 60 ஆயிரம் ஏக்கர் பொதுமக்களின் காணிகளைப் படையினர் வைத்திருக்கின்றனர்.

யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட எந்தவொரு படையதிகாரிக்கோ படைச் சிப்பாய்க்கோ தண்டனை விதிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஹரி ஆனந்தசங்கரி கனடாவின் ஸ்காப்ரோவின் பாராளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



கேலிச்சித்திரம்

# யாரும் எதிர்பாராத மாற்றங்கள் நீதிமன்ற கட்டமைப்பில் விரைவில்

## துறைசார் அமைச்சர் தலதா தகவல்

(கொழும்பு)

**யாரும் எதிர்பார்க்காத மாற்றத்தை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் நீதிமன்ற கட்டமைப்பில் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றேன். அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பாரியளவில் வழக்குகள் குவிந்திருக்கின்றன என நீதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.**

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவாக்க திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியவற்றின் ஊடாக இடம்பெறும் சேவைகள் தொடர்பாக அதிகமானவர்கள் அறியாமல் இருக்கின்றனர். கடந்த 10 வருடாங்களாக இந்த நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் சேவை செய்து



வரும் நீதிபதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எந்த நன்மையும் கிடைத்ததில்லை. அதனால் அவர்கள் மன திருப்தியுடன் பணியாற்றக் கூடிய சூழலை நாங்கள் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

மேலும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இன்று பாரியளவில் வழக்குகள் விசாரணைக்காக குவிந்து காணப்படுகின்றன. அதற்காக போதுமான சட்டத்தரணிகள் இந்தத் திணைக்களத்தில் இல்லாத நிலை காணப்படுகின்றது. சுமார் 200 சட்டத்தரணிகளே இருக்கின்றனர். அதிகமானவர்கள் இவர்களின் சேவையை மதிப்பதில்லை. அத்துடன் பொலிசாரும் தங்களால் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளையும் தங்களை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோக, பெண்கள் வன்முறை வழக்குகளே அதிகம் காணப்படுகின்றன. இவற்றை முறையாகத் தீர்க்கவேண்டும். ஒரு இரவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியாது. அத்துடன் வழக்குகள் தாமதமடைவது தொடர்பாக பாரியளவில் பேசப்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக பாரிய குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. இதற்காக மரண விசாரணை அதிகாரிகளின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சம்பூரில் வீட்டு வளவில் புகுந்த பாரிய முதலை!



(சம்பூர்)

திருகோணமலை - சம்பூரில் குடியிருப்புக் காணியொன்றுக்குள் சுமார் 8 அடி நீளமான முதலை ஒன்று புகுந்துள்ளது.

இந்நிலையில், கந்தளாய் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த முதலையை பாதுகாப்பாக மீட்டுச் சென்றுள்ளனர். .

வீட்டு உரிமையாளர் வெளியே வந்து பார்த்த போது, கிணற்றடியில் பாரிய முதலை ஒன்று இருப்பதை கண்டு சத்தமிட்டு அயலவர்களை அழைத்துள்ளார்.

இதன்போது, முதலை ஓட முற்பட்டுள்ளது. எனினும், வீட்டின் முன்னால் உள்ள வடிகானுக்குள் முதலை வீழ்ந்தது. இதனையடுத்து, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியதையடுத்து, அவர்கள் முதலையை பாதுகாப்பாக மீட்டெடுத்துச் சென்றுள்ளனர். (இ-7)

# ரயில் ஊழியர்களும் இன்று பணிப்பகிஷ்கரிப்புக்கு முடிவு

(கொழும்பு)

ரயில் சேவையிலுள்ள பல்வேறு ஊழியர் சங்கங்களும் இணைந்து இன்று 8ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அச்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந் நடவடிக்கையில், ரயில் சாரதிகள் சங்கம், ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம், ரயில் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் ரயில் முகாமையாளர் சங்கம் ஆகியன இணையவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

# சைட்டம் உரிமையாளர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள தீர்மானம் குறித்து கலந்துரையாட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள புதிய குழுவுக்கு தனது தரப்பையும் சேர்த்துக் கொள்ளுமாறு சைட்டம் உரிமையாளர் டாக்டர் நெவில் பெர்னாந்து ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியிடம் விசேட கடிதம் ஒன்றின் மூலம் இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார். (இ-7)





சமுர்த்தி 'பசுமைப் பூங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் நெடுந்தீவு மேற்கு பிரிவின் ஐக்கிய தீபம் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிரதேச செயலர் சி.ஜெயகாந்தன் தலைமையில் மரக்கன்றுகள் கடந்த 5 ஆம் திகதி நடப்பட்டன.

# பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை நிறைவேற்ற இலங்கைக்கு அமெரிக்கா உதவும்

## கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் உள்ளிட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொனும், வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசமும் இணைந்து நேற்று முன்தினமிரவு வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகம், சட்ட ஆட்சி மற்றும் எமது நாட்டு மக்களின் வாய்ப்புவளம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுக்கான உறுதிப்பாட்டினை பகிரும் வகையில், இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகியன 2017 நவம்பர் மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் இரண்டாவது பங்காளித்துவ உரையாடலை நடத்தியிருந்தன.

இந்த சந்திப்பானது, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச்செயலர்தோமஸ்சானொன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கூட்டு பேச்சுவார்த்தையில் அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பு வலியுறுத்தப்பட்டதுடன், வழக்கமான மற்றும் கட்டமைக்கப்பட்ட சுதந்திர மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியம், உலகம் முழுவதும் சமாதானம் மற்றும் நிலைபேற்றுநிலை நோக்கி கூட்டாக பணியாற்றுவது என இருநாட்டு அரசாங்கங்களும் தீர்மானித்துள்ளன.

அனைத்து நாடுகளும் சர்வதேச சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் அனுபவிப்பதை உறுதிப்படுத்தக் கூடிய விதிமுறைகள் அடிப்படையிலான ஆணை, ஊக்குவிப்பு ஊடாக இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு, நிலைபேற்றுநிலை மற்றும் வாய்ப்புவளம் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை அமெரிக்காவும், இலங்கையும் ஏற்றுக்கொண்டிருந்தன.

பிராந்திய மற்றும் அனைத்துலக ரீதியில் சமாதானம் மற்றும் நிலைபேற்றுநிலைக்கான தொலைநோக்கினை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டதுடன், கடல்பயண மற்றும் வான் பயண சுதந்திரம் மற்றும் தடையற்ற வர்த்தகம் உள்ளடங்கலாக சட்ட விதியின் அடிப்படையிலமைந்த கடற்படை ஆணையை பராமரிப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் கடற்கொள்ளை எதிர்ப்பு அளவுகோல்கள் உள்ளடங்கலாக, சமுத்திர பாதுகாப்பினை பகிர்ந்து கொள்ளல் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான விருப்பையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

தீவுத்தேசம் என்ற வகையில், அதன் சொந்த எல்லைகள் மற்றும் கடல் வளங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை செயற்தகு முறையில் முன்னெடுக்கக் கூடிய வகையில் கடல்சார்ந்த கொள்திறனை கட்டியெழுப்புவதற்கான தேவையை இலங்கை வலியுறுத்தியுள்ளது.

பிராந்திய வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்கும் சுதந்திரமான மற்றும் திறந்த சமுத்திரம் ஊடாக ஆசியா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்கா நாடுகள் மத்தியில் வர்த்தகப் பாய்ச்சலை இணைக்கின்ற ஆசியாவில், வர்த்தகம் மற்றும் முதலீடுகளுக்கான பிராந்திய மையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

வர்த்தகம், முதலீடு, வெளிநாட்டு உதவிகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள பங்குதாரர்களுடனான நேரடியான பங்காளித்துவம் ஊடாக இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளதையும் அமெரிக்கா வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையுடன் வலுவான பொருளாதார பங்காளித்துவத்தையும், உறுதியான வர்த்தக உறவையும் அமெரிக்கா கொண்டுள்ளது. 2016 பெப்ரவரி மாதம் ஆரம்ப பங்காளித்துவ உரையாடல்கள் நடைபெற்றது முதல் இலங்கை மற்றும் அமெரிக்க இருதரப்பு உறவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.



இதில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், போதைவஸ்து எதிர்ப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சட்டவிதி மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்துவதற்காக நிதி மற்றும் கடன் சவால்களை அடையாளப்படுத்த உதவுவதற்காக திறைசேரி மற்றும் நீதித்திட்டங்களுக்கான அமெரிக்கத் திணைக்களங்களை நிறுவுதல் ஆகியவற்றுக்கான ஒத்துழைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதிகளின் இலங்கை பயணம் மற்றும் ஜனாதிபதி மைத்திரி உள்ளிட்ட சபாநாயகர் மற்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் ஆகியோரின் அமெரிக்கப் பயணங்கள் ஆகிய ஒருசில முக்கியமான அதிகாரபூர்வ பயணங்களும் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் வலுவான இருதரப்பு உறவுகளின் அடையாளமாக, அமெரிக்காவின் காங்கிரசின் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததும் இலங்கை கடற்படைக்கு இரண்டாவது கடலோர பாதுகாப்பு கப்பலை வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த செயலாளர் வகுப்பு உயர் தரமிக்க கப்பலானது, இலங்கையை அதன் கடலோரங்கள்மற்றும்தனிப்பட்ட பொருளாதார வலயத்தை திறம்பட காவல் செய்யவும், அதன் வர்த்தக மற்றும் தொடர்பாடலின் சமுத்திர எல்லையை பாதுகாக்கவும் வழிவகுக்கும்.

மேலும் அமெரிக்காவானது, இலங்கையின் ஆங்கில வகுப்புகளுக்கு அமெரிக்க அமைதிப்படை தொண்டர்களை மீள அனுப்புவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவுள்ளது.

உற்பத்தித் திறன், பாலின் தரம், நிதி, உணவுப் பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை மேம்படுத்தி, இலங்கையின் பால் துறையை வலுப்படுத்தி நவீனமயப்படுத்துவதற்காக, விவசாய உணவுக்கான அமெரிக்க திணைக்களத்தின் முன்னேற்ற திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள 21 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டம் குறித்தும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

மில்லேனிய சவால் நிறுவன ஒப்பந்தத்தின் அபிவிருத்திப் பணிகள் 2017-2018 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கை கடற்படையின் மரைன் படைப் பிரிவை நிறுவ உதவுதல், இராணுவ நிபுணத்துவ கல்வியைப் பெறுவதற்கு இலங்கை படையினரை அமெரிக்காவுக்கு அனுப்புதல், இருதரப்பு பயிற்சிகள் மற்றும் கப்பல் பயணங்கள் மற்றும் இரு நாடுகளிலுமுள்ள மிகச்சிறந்த இராணுவ அதிகாரிகளுக்கிடையிலான இருதரப்பு மற்றும் பிராந்திய மூலோபாய நலன்களுக்காக இராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு இருநாடுகளுமே ஒப்புக்கொண்டுள்ளன.

நீடித்த சமாதானத்தை அடைந்து கொள்வதற்கான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் இலங்கையின் உறுதிப்பாட்டினை மீள் உறுதி செய்து, 2017 மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதன் இணை அனுசரணையை இலங்கையும் அமெரிக்காவும் நினைவுபடுத்தியது.

மனித உரிமைகள்ஆணைக்குழுவில் ஒப்புக்கொண்ட உண்மையைக் கண்டறிதல், நீதி, இழப்பீடுகள் மற்றும் மீளநிகழாமைக்கான உத்தரவாதங்கள், காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு பதிலளித்தல் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான சீர்திருத்தங்களை செயற்படுத்தல் ஆகிய உறுதிப்பாடுகளை செயற்படுத்துவதற்கு தமது ஆதரவினை இலங்கைகைக்கு வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

நல்லிணக்க நடவடிக்கைகளுக்கான ஆதரவு ஊடாக இலங்கை மக்களின் விருப்பைப் பிரதிபலிக்கும் இந்த உறுதிப்பாடுகளை செயற்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தை யுஎஸ்எய்ட் வழிநடத்தவுள்ளது.

ஜனநாயகம், ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள், நல்லாட்சி, சட்ட விதிமுறை, நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் உறுதியளிப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சீர்திருத்தம், பாதுகாப்பு படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், காணாமல்போனோருக்கான சுயாதீன மற்றும் நிலையான பணியகத்தை அமைத்தல் ஆகிய விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கம், சட்டஆட்சி மற்றும் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளுக்கிணையாக, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பும் தொடரவுள்ளது.

இதில் கண்ணிவெடிகளை அகற்றுதல், இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சி, கப்பல்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் வருகை ஆகிய அமெரிக்காவின் உதவிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத குழுக்கள் தொடர்பான தமது கரிசனையை இலங்கையும், அமெரிக்காவும் பகிர்ந்து கொண்டுள்ளன.

வட கொரியாவின் சட்ட விரோதமான அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களினால்அனைத்துலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்தும், வட கொரியா மீது அனைத்து ஐ.நா. உறுப்பினர்களும் அழுத்தம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்துவம் குறித்தும், இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானங்களின் முழுமையான செயல்முறைப்படுத்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

2017 ஒகஸ்ட் முதல் செப்டெம்பர் மாதம் வரை இலங்கையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்து சமுத்திர பிராந்திய மாநாடு குறித்து இருநாடுகளுமே தங்களது திருப்தியை வெளிப்படுத்தியதுடன், இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு, நிலைபேற்று நிலை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொருளாதார வாய்ப்பினை மேம்படுத்தக் கூடிய கூட்டு திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் இணங்கியுள்ளன.

அமெரிக்காவும்,இலங்கையும் தமது இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், பரஸ்பர நலன்களுக்காக அமெரிக்கா - இலங்கை பங்காளித்துவத்தை வலுப்படுத்துவதற்கான தமது உறுதிப்பாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளன.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைத் தொடர்ந்து இலங்கையை அங்கீகரித்த முதன்மையான ஒருசில நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகும். 2018 ஆம் ஆண்டு இலங்கை-அமெரிக்காவுக்கிடையிலான இராஜதந்திர - உறவுகளின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தமது ஈடுபாடு மற்றும் பரஸ்பர ஆதரவை நோக்கிப் பணியாற்றுவதற்கான அர்ப்பணிப்பை இரு நாடுகளும் கொண்டுள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)




# நாட்டுக்கு ஷரீஆ சட்டம் தேவையில்லை மெதகொட அபேதிஸ்ஸ தேரர் வலியுறுத்து

(கொழும்பு)



இந்த நாட்டுக்கு உடரட்ட சட்டமோ, பஹத ரட்ட சட்டமோ, தேசவழமை சட்டமோ, ஷரீஆ, சட்டமோ தேவையில்லை.

அனைவருக்கும் பொருத்தமான நீதியே தேவை என இலங்கை பாலி மற்றும் பௌத்த பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஹம்மதியா சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவுவிழா அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மெதகொட அபேதிஸ்ஸ தேரர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# பசுமை மாறா பலாமரம்

தாவரவியல் பெயர்: ஆர்டோகார்பஸ் ஹெட்டிரோஃபில்லஸ் ArtocarpusheterophyllusLam
தாவரக் குடும்பம் : மோரேசியே Moraceae

தமிழ் மக்களின் 'முக்கனிகளில்' ஒன்றெனப் பெருமையுடைய பலா, ருசி மிக்க கனிகளைத் தருவதுடன் பெற்றுக் கொள்ளக் கூடிய பரந்தளவிலான நன்மைகள் காரணமாக இலங்கை மக்களிடையே நன்கு பிரபல்யம் அடைந்துள்ளது. பெரும்பாலும் வீட்டுத்தோட்டங்களிலோ அல்லது மற்ற பழத்தோட்டங்களில் துணைப் பயிராகவோ வளர்க்கப்படுகிறது.

பலா ஒரு பசுமைமாறா மரம்வறண்ட இடங்களிலும்கூட, முழுமையாக இலையுதிர்த்திடாது ஓங்கி உயர்ந்து 10-20 மீற்றர் வரை வளரக் கூடியது. நல்ல வடிகால்வசதியுள்ள மண்ணில் பலா நன்றாக வளரும். சுண்ணாம்பு பாங்கான நிலத்தில் சற்று மெதுவாகத் தான் வளரும். பொதுவாக, பலா மரமானது 4-8 வருடம் முதல் காய்க்கத் தொடங்கும். வருடமொன்றில் இரு தடவைகள் காய்க்கும். பங்குனி-ஆனி பிரதான பருவமாகும். கார்த்திகை-தை அடுத்த பருவமாகும். சராசரியாக 75 -125 வருடங்கள் உயிர் வாழும்.

பலாச்சுளையின் மென்மையான, கடினமான தன்மை என்பவற்றிற்கு ஏற்ப வரக்கா, கூழன் என இரு வகைப்படும். பல்வேறு வகையான பலா வர்க்கங்கள் காணப்படுவதோடு அவை எப்போதும் ஒரே மாதிரியானவையாகக் காணப்படுவதில்லை. இதற்கான பிரதான காரணிகளாவன, அயன் மகரந்தச்சேர்க்கை அடைதல், விதைகள் மூலம் நடுகை என்பனவாகும். இதனாலேயே சுளையின் நிறம் மாறுதல், தோலில்லாத விதை, விதையில்லாத, குறைவான நாருள்ள, அதிக இனிப்புத் தன்மையான சுளைகள், உயர்தரமான பலாப்பிஞ்சு போன்ற பல வேறுபாடுகள் வர்க்கங்களுக்கிடையே நிலவுகின்றது.

பலாவின் பிரதான உள்ளடக்கம்காபோவைதரேற்று ஆகும். இதனைத் தவிர புரதம், கனிப்பொருள், விற்றமின் வகைகளும் அடங்கியுள்ளன. இதனால் பலாவை சக்தியை வழங்கும் உணவாகக் குறிப்பிடலாம்.

புலா சாதாரணமாக விதை மூலமே வளர்க்கப்படுகிறது. நீரிலோ, 10% ஜிப்பரெலிக் அமில கரைசலிலோ ஊறவைப்பதன் மூலம் விதைகள் விரைவாக முளைக்கும். விதைகளை நிலத்தில் நேரடியாக நடாமல் நாற்றுக்கள் மூலம் நடலாம். ஆனால், நாற்றுகளை விரைவில் நடாவிட்டால் அவை நாற்றுப் பருவத்திலேயே வேர் பிடித்து விடும்.

பலவிதமான ஒட்டுமுறைகளிலும் பலாச்செடிகள் உருவாக்கப்படுகின்றன, ஒட்டுக் கன்றுகளை நடுகை செய்வதன் மூலம் குறுகிய காலத்தில் பழங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் அதிக உயரத்திற்கு வளராது கிளைகள் பரந்து வளரும். திசு வளர்ப்பு முறையிலும் பலாச் செடிகள் உருவாக்கப் படுகின்றன.

பலாநாற்றினை நிலையானதொரு இடத்தில் நட்டபின்னர் இயற்கையாக வளர்வதற்கு இடமளிப்பதோடு நான்கு திசைகளிலும் பரந்து வளர வசதியளித்தல் வேண்டும். காய்களை அறுவடை செய்த பின்னர் மரங்களில் முறையான கத்தரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் மரங்கள் உயரமாக வளர்வதைக் கட்டுப்படுத்தி அழகான மரங்களாக உருவாக்கி காய்களையும் கனிகளையும் இலகுவாகப் பறித்துக் கொள்ள முடியும்.

வேர்ப் பகுதியில் நீர் தேங்குவது பலாமரத்திற்கு உகந்ததல்ல. இதனால் மரத்தின் வேரில் பங்கசு தொற்றல் ஏற்பட்டு பெரிய மரமாயினும் வாடி இறந்து விடும்.

பயன்கள்

பலாப்பழம் ஊட்டச்சத்து மிக்கது. மருத்துவகுணம் கொண்டது. இரத்தத்தை விருத்தி செய்யும். உடலுக்கு ஊக்கமளிக்கும். நரம்புகளுக்கு புத்துணர்வூட்டும். விற்றமின் ஏ சத்து அதிகம்உள்ளது. உடலுக்கும்மூளைக்கும் வலுவளிக்கும். நோய்களைக்குணமாக்கும். விற்றமின் சி அதிகமாக உள்ளதால், பலா மிகச் சிறந்த ஆன்டி-ஆக்ஸிடன்ட் ஆகவும் செயலாற்றுகிறது. வைரஸ் மற்றும் பக்டீரியாக்களால் நோய்த்தொற்று உண்டாகாமல் தடுக்கிறது. பலாச் சுளையை தேனில் நனைத்து சாப்பிட்டால் நன்கு சமிபாடடையும். வெள்ளை அணுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து, நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுகிறது. மலச்சிக்கலை நீக்க பலாப்பழம் உதவுகின்றது. 100 கிராம் பலாப்பழத்தில் 303 மி.கிராம் பொட்டாசியம் உள்ளது. இதனால் உயர் இரத்த அழுத்தத்தை குறைக்க பலாப்பழம் சிறந்ததாகும்.

பலாப்பிஞ்சு கறியாகச் சமைத்து உண்ணலாம். நரம்புத் தளர்வைப் போக்கும். உடலிலுள்ள தேவையற்ற நீரை வெளியேற்றும். பலாக்காய் தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கக் கூடியது. உடல்சூட்டைத்தணிக்கும். பித்த மயக்கம், வாந்தி ஆகியவற்றை குணமாக்கும். அதிகமாகச் சாப்பிட்டால் அஜீரணக் கோளாறு உண்டாகும். இதனை உலர்த்தி நீண்டகாலம் சேமித்து வைக்க முடியும்.

பலா விதை நல்லதொரு உணவாகும். பலாப்பழம் இனிப்புச் சுவை அதிகம் இருப்பதால் சிலர் பழத்தை அதிகம் சாப்பிட்டு வயிற்றுப் பொருமலால் அவதிப்படுவர். இதற்கு ஒரு பலாக்கொட்டையை மென்று சாறை மட்டும் விழுங்கினால் உடனே வயிற்றுப் பொருமல் நீக்கும்.

இலை ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படுத்தப்படுகின்றது.

பழுத்த பலா இலையை அவித்துப் பெறப்படும் பானம் நீரிழிவு நோய்க்கு சிறந்தது.

பலாவின் காயிலிருந்தும் மரத்திலிருந்தும் பால் எடுக்கலாம். பாலினை எடுத்து நெறி கட்டிகள், நீண்டநாள் உடையாமல் இருக்கும் கட்டிகள் மீது பூசி வர அவைபழுத்து உடையும் அல்லது அமுங்கி விடும். மரத்துப் பாலிற்கு பக்டீரியாக் கிருமிகளைத் தடுக்கும் திறன் உள்ளது. அதிலும் குச்சிகளின் பாலில் இத்திறன் நான்கு மடங்காக உள்ளது.

இலங்கையில் பயன்படுத்தப்படும் உயர் தரமான பலகைகளில் பலாவும் ஒன்றாகும். மஞ்சள்மற்றும்செம்மஞ்சள் நிறத்தில் பார்ப்பதற்கும் அழகானவையாக பலா பலகைகள் இருக்கும். மிக நீண்டகாலப் பயன்பாட்டிற்கு ஏற்ற மிகவும் உறுதி வாய்ந்த பலகை.

பலாமரத்தின் பயன்களை முழுமையாகப் பெற்று நீண்ட ஆரோக்கியம் பெறுவோம்.

திருமதி ரேவதி முத்ரூபன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1243

Search for people, places and things · Nagendram · Home

| கவி | யாழினி | தயா |
|---|---|---|











| ஹரி | நிரோ | துர்க்கா |
|---|---|---|







நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எரிபொருள் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும்

(கொழும்பு)

எரிபொருள் பிரச்சினை குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். நாட்டில் தற்பொழுது நிலவி வரும் எரிபொருள் தட்டுப் பாட்டுப் பிரச்சினையின் பின்னணியில் விலை மனுக் கோரல் சர்ச்சை நிலவி வருகின்றது.

களஞ்சியப்படுத்தல் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு விடயங்களிலும் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள் ளன. இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வி எழுப்ப திட்டமிட்டுள்ளோம்.

நிலவி வரும் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# பெற்றோலிய துறையிலுள்ள மாபியா குறித்து அமைச்சர் சம்பிக்க விளக்கம்

(கொழும்பு)

பெற்றோலியம் மற்றும் மின்சக்தி ஆகிய துறைகளில் தொடர்ந்தும் பல்வேறு தரப்பட்ட மாபியாக்கள் செயற்பட்டுவருவதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



எண்ணெய் சுத்திகரிப்பு தடைப்படுவது, எண்ணெய்க் கப்பல் தாமதமாவது, நாட்டில் எண்ணெய் பற்றாக்குறை ஏற்படுவது என்பன எதேச்சையாக நடைபெறும் விடயங்களா? என்பவற்றை கண்டறிய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பெற்றோலிய துறையிலும், மின்சக்தி துறையிலும் எப்போதுமே பற்றாக்குறையொன்றை ஏற்படுத்தி கூடிய விலையில் கொள்வனவு இடம்பெற்று வருகின்றது. இந்த உண்மையை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நான் அமைச்சராக இருந்த காலத்திலும் எண்ணெய் நெருக்கடியொன்றை ஏற்படுத்த சில சதிகள் இடம் பெற்றன. அதனை நான் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தேன். அதனை எப்படி கட்டுப்படுத்தினேன் என்பதை பகிரங்கமாகக் கூற நான் விரும்பவில்லை.

அதன்பின்னர், எனது காலத்தில் யாரும் இந்த எண்ணெய் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்க முன் வரவில்லை. நல்லாட்சி என்பது சிறந்தது. இருப்பினும், நிர்வாகம் என்பதும் இடம்பெற வேண்டும் என வும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திருகோணமலையில் நிலத்தடி மாளிகை!

## கல்வி அமைச்சு தகவல்



(திருகோணமலை)

திருகோணமலையில் நிலத்தடி மாளிகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலை de redout போர்க்கள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆராய்ச்சியின் போது நிலத்தடி அறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாக அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டத்தின் போது இந்த நிலத்தடி அறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலத்தடி அறையின் விசேட பகுதி ஒன்றுக்கு கொங்கிறீட் கலவை பயன்படுத் தப்பட்டு நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டறியப் பட்டுள்ளது.

இந்நிலையில் மண்ணின் ஊடாக அதற்குள் நுழைவதற்கான கதவு ஒன்று வைத்து மூடப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த கதவு கருங்கற்களினால் கட்டி மூடப்பட்டுள்ள நிலையில், தோன்றியுள்ள நிலத்தடி அறை மற்றும் ஆங்கிலேயர் காலகட்டத்தில் கட்டப்பட்ட பீரங்கித் தாங்கி ஒன்றும் காணப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர்களினால் கொங்கிறீட் கல், மணல் ஆகியவைகள் பயன்படுத்தி ஆரம்ப மாற்றங்கள் மேற்கொண்டு நிர்மாணிப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள் ளன.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது அந்த பகுதிகளில் மணல் மற்றும் பெற்றோலினால் நிரப்பப்பட்டு மூடப்பட்டுள்ளது.

அத்துடன் ஓரளவு நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும், நிர்மாணிப்புகள் சீமெந்து பயன்பாட்டில் நிறைவு செய்யப்பட்டிருந்ததாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# தொடரும் போராட்டங்கள்

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை மூடுமாறு கோரி மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர்கள் சங்கத்தினர் சாகும் வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த போராட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்னால் கூடாரம் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்றும் தொடர்ந்தது.

சைட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறியே இந்தப் போராட்டத்தினை ஆரம்பித்தனர்.



சைட்டம் கல்லூரியை மூடி இதற்கு நிரந்தர தீர்வை பெற்றுத் தரும் வரையில் சாகும் வரையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட போவதாக மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர்கள் சங்க ஊடக பேச்சாளர் நிமல் கருணாசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதனை மூடுமாறு கோரி நாட்டின் பல பாகங்களிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு துறைமுகத்திற்கு 25 ஆவது இடம்



(கொழும்பு)

உலகில் மிகவும் வேலைப்பளு மிக்க துறைமுகங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் கொழும்பு துறைமுகம் 25 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

சீனத்துறைமுகங்கள் இந்த பட்டியலில் முன்னிலை வகிக்கின்றன. ஷங்காய் துறைமுகம் முதலிடத்தில் உள்ளது. சிங்கப்பூர் துறைமுகம் இரண்டாவது இடத்தை தக்கவைத்துள்ளது. (இ-7)

# பட்ஜெட் தயாரிப்பு யோசனைகளை சுதந்திரக்கட்சி கொடுத்துவிட்டது

## அமைச்சர் அமரவீர தகவல்


(கொழும்பு)

2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கான எங்களுடைய யோசனைகள் அடங்கிய அறிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிதியமைச்சர் மங்கள சமரவீரவிடம் கையளித்துள்ளது? என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

"மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், நாட்டின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் கல்வி, சுகாதார சேவைகள் உள்ளிட்ட மக்களுக்குப் பயன்தரக்கூடிய யோசனைகள் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன" என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்து, மக்களுக்குச் சலுகைகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் எனவும் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)



# விஞ்ஞான ஆய்வு பிரசுரங்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கல் நிகழ்வு




(கொழும்பு)

விஞ்ஞான ஆய்வு பிரசுரங்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கல் விழா உயர் நியமங்களுடன் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருத்துவம், விவசாயம் மற்றும் பொறியியல் துறைகளில் 2015 ஆம் ஆண்டு கூடிய விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபட்ட 200 பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2001 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு பிரசுரங்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கல் விழா இம்முறை 10ஆவது தடவையாக இடம்பெறுவதுடன், இதனை தேசிய ஆய்வுகள் பேரவை ஒழுங்கு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன, அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன, தேசிய ஆய்வுப் பேரவையின் தலைவர் பேராசிரியர் ஜானக்க டி சில்வா, நிறைவேற்றுச் செயலாளர் மனிஷா ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (இ-7)

# இந்தியாவிலிருந்து ரூ.1300 மில்லியனுக்கு கடந்த இரு மாதங்களில் அரிசி இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கடந்த இரண்டு மாத காலத்திற்குள் 1300 மில்லியன் ரூபாய் பெறுமதியான அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுக்கான அமைச்சரவை உபகுழுவின் தீர்மானத்திற்கு அமைவாக 20 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அத்தொகை முழுவதும் சந்தைக்கு விநியோகத்திற்கென அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் நாட்டரிசியானது கிலோகிராம் 74ரூபாவுக்கு விற்கப்பட்டுவருவதோடு 25 கிலோவிற்கு மேற்பட்ட அரிசியை கொள்வனவு செய்பவருக்கு கிலோகிராம் 73 ரூபாவிற்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ள 30 ஆயிரம் மெற்றிக் தொன் சம்பா அரிசியில் 15 ஆயிரம் மெற்றிக்தொன் சம்பாவுக்கான கட்டளைகள் அந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு இம்மாத நடுப்பகுதியில் அந்த அரிசியானது நாட்டை வந்தடையவுள்ளது.

குறித்த தொகை அரிசி இறக்குமதிக்கு அரசாங்கம் 926மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நூலகவியல் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலக சங்கத்தால் நடத்தப்படும் நூலகவியல் கற்கை நெறி (DIPLIS LEVEL 111) எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளதால் இதுவரை இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள் இலங்கை நூலக சங்கத்துக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு இலங்கை நூலக சங்கத்தின் யாழ்.நிலைய இணைப்பாளர் திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-9)

# எனது இல்லத்திற்கு வாருங்கள் கலைஞருக்கு மோடி அழைப்பு





(சென்னை)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்தார். இச்சந்திப்பு குறித்து பல ஊகங்களை தமிழக மற்றும் இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. இது ஒரு நாகரிகமான அரசியல் சந்திப்பு என இரு தரப்பும் கூறியுள்ள அதேவேளை, தலைவர் கருணாநிதியை ஓய்வெடுக்க தனது டில்லி இல்லத்திற்கு மோடி அழைத்ததாக, மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான இச்சந்திப்பு பத்து நிமிடங்களே நீடித்தன. இருந்த போதிலும் இது, 2019 ஆம் ஆண்டு இடம்பெறும் லோக்சபா தேர்தல் கூட்டணிக்கு அச்சாரமிடும் சந்திப்பு என ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. அதேவேளை டில்லி சி.பி.ஐ. நீதிமன்றம் 2G காற்றலை வழக்கின் தீர்ப்பை வெளியிடவிருக்கும் நிலையில் இச்சந்திப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பது பலருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வழக்கின் தீர்ப்பு கனிமொழி மற்றும் முன்னாள் அமைச்சர் ராசா மீது மட்டுமன்றி, தி.மு.கவின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் ஒன்றாக அமையும் என தெரிய வருகிறது.

தமிழக ஆட்சியில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளமையும் ஊடகங்களின் புதிய ஊகங்களுக்கு இடமளித்துள்ளது. அது மட்டுமன்றி நடிகர் கமல்ஹாசன் தனது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்த இருக்கும் காலகட்டத்தை அண்மித்ததாகவும் இச்சந்திப்பு இடம்பெற்றிருக்கிறது.

தினத்தந்தி பத்திரிகையின் பவளவிழாவில் கலந்துகொண்ட பின்னரே, பிரதமர் மோடி கலைஞரை அவரது கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தார். அவரை செயல் தலைவர் மு.க.ஸ்டாலின், துரைமுருகன், கனிமொழி ஆகியோர் வரவேற்றிருந்தனர். (இ-7)

# தேசிய விருது வழங்கும் விழா

## வடமாகாணத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஐம்பது சிறப்பு விருதுகள், ஐந்து தங்க விருதுகள்



இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தேசிய விருது வழங்கும் விழாவில் வட மாகாணம் 5 தங்க விருதுகளையும், 50 சிறப்பு விருதுகளையும் பெற்றுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் நலன்புரி , மரபுரிமைகள் அமைச்சின் கீழ் தொழிற்படும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தேசிய விருது வழங்கல் விழா - 2017 ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தலைமையில் கடந்த வாரம், கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம், யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் , சமூக பாதுகாப்பு சபையின் சிரேஷ்ட ஒருங்கிணைப்பு அதிகாரி பா.பிரதீபன் , கிளிநொச்சி மாவட்ட சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி த.சுதாகரன்.யாழ் மாவட்ட சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி திருமதி.த.ரேவதி ஆகியோர் ஜனாதிபதியிடம் இருந்து தங்க விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும் கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சி , கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்கள், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், விடயப்பொறுப்பு முகாமைத்துவ உதவியாளர்கள், கிராம உத்தியோகத்தர் உட்பட வடமாகாணத்தைச் சேர்ந்த 50 உத்தியோகத்தர்கள் சிறப்பு விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஓய்வூதியத் திட்டத்தில் அதி கூடிய பயனாளிகளை இணைத்துக்கொண்டமைக்கே மேற்குறித்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் 2016 ஆம் ஆண்டு ஓய்வூதியத் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 11158 பயனாளிகளும் யாழ்மாவட்டத்தில் 9022 பயனாளிகளும் ஆக அதிகூடிய பயனாளிகளை இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# பரிசளிப்பு விழாவும் உதவி வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ். அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் போட்டோக்கொப்பி இயந்திரம், துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் நவரத்தினம் இராசலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாரிமுத்து நவநீதமணி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்

இ.கிஷாந்- 161. (இ)

# சேறும் சகதியுமாக சந்தை



கடும் மழை காரணமாக நெல்லியடி புதிய சந்தையின் முன்பகுதி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. பொதுமக்கள் பொருட்கள் வாங்கச் செல்லும் போது இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். (இ-60)

# ஆனைவிழுந்தான் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு



(கரணவாய்)

வடமராட்சி வல்லிபுரம் ஆனைவிழுந்தான் பகுதிகளில் கொட்டப்படும் கழிவுகள் காரணமாக பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் வீதிகளால் பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் சேரும் கழிவுகள் மாத்திரமல்லாவது கோழிகள், ஆடு, மாடு போன்றவற்றின் கழிவுகளும் அவை இறைச்சிக்காக வெட்டப்பட்டு அதன் எச்சங்களும் கொட்டப்படுகின்றன.

இதனால் வீதிகளில் செல்வோர் துர்நாற்றத்தை சகித்துச் செல்ல வேண்டியுள்ளது. மேலும் ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு செல்வோரும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். (இ-60)

# நீதிமன்ற செயற்பாட்டை குழப்பிய நபர் கைதானார்

(கரணவாய்)

நீதிமன்ற செயற்பாட்டை குழப்பும் வகையில் சத்தமிட்ட நபர் ஒருவரை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற செயற்பாடுகள் நேற்று முன்தினம் வழமை போன்று நடந்து கொண்டிருந்தது. இதன்போது வழக்கிற்கு வருகை தந்திருந்த நபர் ஒருவர் திடீர் என நடுப் பகுதிக்கு வந்து பாரிய சத்தமிட்டார். இதனையடுத்து நீதவான் திருமதி நளினி சுபாகரன் அந்நபரை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதனையடுத்து அந்நபர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்நபர் பல கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் எனப் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-60)


AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY

- சகல அரச நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைய மிக மிக தரமான உணவுகளை குறைந்த விலையில் வழங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு ஸ்தாபனம் ஆச்சி ஹொட் பூட்.
- கல்வி பயிலும் மாணவ சமூகத்திற்காக விசேட விலைக் கழிவுகளில் பாடசாலைகளுக்கு உணவு விநியோகம்.
- இன்று வடமாகாணத்தில் அதிகளவான உணவுகளை உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களுக்கு கட்டாயமாக்கப்பட்ட ஒரு நிறுவனமாக உள்ளது.
- நேரடி மேற்பார்வையின் கீழ் உணவு உற்பத்தி, பொதியிடல், விநியோக செயற்பாடுகள்.
- கைதடி உணவுத் தொழிற்சாலையை பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.
- திருப்திகரமான உணவுடன் கூடிய சேவையே எமது பிரதான நோக்கம் ஆகும்.
- கைதடி மற்றும் வடக்கு விவசாயிகளின் வாழ்வுக்கு வலுவூட்டுவோம்.
- தினசரி கூடுதலான விவசாய உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்து சுய வருவாயை ஈட்டிக் கொள்ளவும்.
- சிறந்தவொரு வாழ்க்கையை முன்னெடுக்கவும் உதவி வருகிறது.
- கடுமையான தரக்கட்டுப்பாட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதி உயர்தரம் உறுதி செய்யப்படுகிறது.

Aache Food Factory, Kaithady.
021 205 7455, 021 205 7456

Aache Hot Food Resturant
147, Palaly Rood, Thirunelvely,
021 222 5001

(சி-200)






# அரணாகும் அறிவு!



(நேற்றைய தொடர்ச்சி)

பிரபுக்கள் சைகை செய்து கப்பலை செலுத்தச் சொன்னார்கள்.

கப்பல் புறப்பட்டது. கண்ணீருடன் சிலர் கப்பல் மறையும் வரை பார்த்து நின்றனர்.

சில நாட்கள் கழித்து அந்தக் கப்பல் மீண்டும் வந்தது. மாலுமி பிரபுக்களிடம் வழக்கம் போல் விசாகனையும் குறித்த இடத்தில் கடலில் தள்ளிவிட்டதாகத் தெரிவித்தான். பிரபுக்களும் அடுத்த மன்னனைத் தேர்ந்தெடுத்து பட்டாபிஷேகம் செய்து முடித்தனர்.

இப்போதும் செண்பகபுரி மக்கள் காணாமல் போவது நிற்கவில்லை.

பிரபுக்களின் கவலை அதிகமாயிற்று. அவர்களின் அதிகாரத்திற்கு இடையூறு வந்ததேயென்று அச்சமும் கோபமும் கொண்டனர். ஓராண்டு முடியும் தறுவாயில் அந்த செண்பகபுரி மீது படை எடுத்தான் ஒரு மன்னன். பிரபுக்களுக்கு அச்சத்தை விட ஆச்சரியமே மேலோங்கியது. ஒற்றர்களை ஏவி யாரது என விபரம் கேட்டனர்.

வீரபுரி என ஒற்றர் தெரிவிக்க மிகுந்த ஆச்சரியத்துக்கு உள்ளாகினர். அப்படி ஒரு நாடு இருப்பதாகவே தெரியாதே எனத் திகைத்து முடிக்கும் முன்பாகவே வீரபுரி மன்னன் அரண்மனைக்குள் நுழைந்து மன்னராக ஆட்சி புரிந்து வந்த பிரபுக்களை எல்லாம் கைது செய்து சிறையில் அடைத்தான். செண்பக புரியின் ஆட்சியைக் கைப்பற்றினான்.

பட்டாபிஷேகம் செய்து கொண்ட அந்தக் காட்சியைக் கண்டு தலை குனிந்து நின்றிருந்த பிரபுக்களின் முன் வந்து நின்றான் அந்த வீரபுரி மன்னன்.

"என்னைப் பார்த்த நினைவில்லையா உங்களுக்கு? ஓராண்டுக்குள்ளாகவே என்னை மறந்து விட்டீர்களா?"

இந்தக் குரலும் முகமும் பழக்கமானதாக இருக்கிறதே எனத் திகைத்தார்கள் பிரபுக்கள். அப்போது அவர்கள் முன் வந்து நின்றாள் வைசாலி.

"திகைக்காதீர்கள் கடந்த ஆண்டு உங்களுக்கு மன்னனாக இருந்த விசாகன்தான் என் மகன். உங்களுக்கு அடிமையாக ஒரு ஆண்டு உங்கள் கைப் பாவையாக பொம்மை அரசனாக இருந்தவன் தான்"

"இன்னும் சாகாமல் இருப்பது எப்படி? காட்டில் வனவிலங்குகள் இவனைக் கொல்லவில்லையா? எப்படி ஒரு நாட்டின் மன்னனானாய்?" அவர்களுக்கு எழுந்த சந்தேகத்தைப் போக்கி வைத்தாள் வைசாலி.

"நீங்கள் என் மகனை மன்னனாக்கியதும் அவனிடம் சில வேட்டைக்காரர்களை அனுப்பி அந்தக் காட்டிலுள்ள வனவிலங்குகளை வேட்டையாடச் சொன்னேன். மீண்டும் விவசாயிகள், கட்டடக் கலைஞர்களை அனுப்பி காட்டை நாடாக்கினேன். அதையெல்லாம் சீர் செய்ய நானே அங்கு சென்று என்மகன் வரும் வரை நாட்டைப் பாதுகாத்து படைகளைச் சேர்த்து வந்தேன். இந்த ஓராண்டுக்குள் எங்கள் வீரபுரி உங்கள் செண்பக புரியை விட வலுப்பெற்று நிற்கிறது. என்மகன் விசாகன் இப்போது அறிவினாலும் வீரத்தினாலும் உங்கள் முன் வெற்றிவீரனாக நிற்கிறான்"

விசாகன்-"பிரபுக்களே உங்களின் பேராசையால் அப்பாவி இளைஞர்களை நீங்கள் பலி கொடுப்பதை நிறுத்த என் தாயின் ஆலோசனையின்படி நடந்து நானும் உயிர்பெற்று பிற இளைஞர்களையும் காப்பாற்றிவிட்டேன். எங்கள் உயிருக்கு அரணாக இருந்தது என் தாயின் அறிவு சார்ந்த ஆலோசனைகளே. இனி இந்த செண்பகபுரி வீரபுரியின் ஆட்சிக்குட்பட்டது" என்று சொன்னதைக் கேட்டு மக்கள் மகிழ்ந்தனர். விசாக மாமன்னர்! வாழ்க, வாழ்க! என்ற கோஷம் வானைப் பிளந்தது.

"அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அரண்"

அறிவு அழிவு வராமல் பாதுகாக்கும் ஆயுதம். பகைவராலும் அழிக்கமுடியாத பாதுகாப்பு அறிவு என்ற வள்ளுவர் வாக்கு உண்மையல்லவா? இதுவரை ஏமாற்றி வாழ்ந்தோம். இப்போது அறிவு நம்மை வீழ்த்தி விட்டது என்று மனம் திருந்தி வைசாலியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர் பிரபுக்கள்.

உண்மைதானே. அறிவிருந்தால் எங்கும் வெற்றி பெற்று வாழலாம். எனவே அறிவைப் பெருக்கிக் கொள்வோம். ஆனந்தமாய் வாழ்வோம்.

(முற்றும்)

## 11.2017 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1520- டென்மார்க் படைகள் சுவீடனை முற்றுகையிட்டன. சுமார் 100 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

❖1811- இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும். Puisne Justice என அழைக்கப்படும் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டன. கிரிமினல் வழக்குகளுக்கு ஜூரி முறையும் அமுலுக்கு வந்தது.

❖1889- மொன்டானா ஐக்கிய அமெரிக்காவின் 41வது மாநிலமாக இணைந்தது.

❖1895- எதிர்மின் கதிர்களைச் சோதனையிடும் போது வில்ஹெம் ரொண்ட்ஜென் எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தார்.

❖1917- ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சியை அடுத்து லெனின், ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருக்கு முழு அதிகாரமும் தரப்பட்டது.

❖1923- மியூனிக் நகரில் ஹிட்லர் தலைமையில் நாசிகள் ஜேர்மனிய அரசைக் கவிழ்க்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

❖1938- பாரிஸ் நகரில் ஜேர்மனிய தூதுவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஜேர்மனியிலும் அவுஸ்திரேலியாவிலும் யூதர்களுக்கு எதிராக வன்முறைகள் கிளம்பின.

❖1939- மியூனிக் நகரில் ஹிட்லரைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

❖1942-மேற்கு உக்ரேனின் தெர்னோப்பில் நகரில் நாசி ஜேர்மனியினர் 2,400 யூதர்களை பெல்செக் நகரில் இருந்த வதை முகாமுக்கு அனுப்பினர்.

❖1965- பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் மண்டலம் அமைக்கப்பட்டது.

❖2006- வாகரை குண்டுத்தாக்குதல் மட்டக்களப்பு வாகரையில் இலங்கை இராணுவத்தினர் ஏவிய பல்குழல் எறிகணை வீச்சுத் தாக்குதலில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 125இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

❖1656- எட்மண்டு ஏலி, ஆங்கிலேய வானியலாளர் (இ. 1742)

❖1680- வீரமா முனிவர், இத்தாலியத் தமிழறிஞர் (இ. 1742)

❖1875- சியு சின், சீனப் புரட்சியாளர், பெண்ணிய எழுத்தாளர் (இ. 1907)

❖1893- துவாரம் வேங்கடசுவாமி நாயுடு, வயலின் இசைக் கலைஞர் (இ. 1964)

❖1902- ஜி.ஜி. பொன்னம்பலம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1977)

❖1903- அல்பிரட் தம்பையா, இலங்கைத் தமிழ் தொழிலதிபர், அரசியல்வாதி

❖1912- டி. எஸ். சந்தானம், தமிழகத் தொழிலதிபர் (இ. 2005)

❖1908- ராஜா ராவ், இந்திய எழுத்தாளர் (இ. 2006)

❖1923- ஜாக் கில்பி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ. 2005)

❖1946- கி. சுந்தர்ராஜ், மலேசிய எழுத்தாளர்

❖1976- பிறெட் லீ, அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

### இறப்புகள்

❖955- இரண்டாம் அகாப்பெட்டஸ் (திருத்தந்தை)

❖1674- ஜான் மில்டன், ஆங்கிலேயக் கவிஞர் (பி.1608)

❖1958- சி. கணேசையர், இலங்கைத் தமிழறிஞர் (பி.1878)

❖2000- சோ. சிவபாதசுந்தரம், வானொலி ஒலிபரப்பாளர், ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி. 1912)

❖2013- சிட்டிபாபு, இந்திய நடிகர் (பி.1964)

❖2014- வி. சிவசாமி, ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர் (பி. 1933)

❖2014- ஐ. எஸ். முருகேசன், தமிழக இசைக் கலைஞர் (பி. 1930)

❖2015- மாதுலுவாவே சோபித தேரர், இலங்கைப் பௌத்த துறவி, அரசியல் செயற்பாட்டாளர் (பி. 1942)

### சிறப்பு நாள்

❖பன்னாட்டுக் கதிரியல் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 160 | 200 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 95 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 450 | 600 | 500 | 500 | 500 |
| தக்காளி | 100 | 100 | 140 | 120 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 60 | 60 | 50 | 50 |
| கோவா | 120 | 70 | 140 | 160 | 80 | 120 |
| கரட் | 70 | 100 | 100 | 240 | 100 | 160 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 | 50 | 80 |
| புடோல் | 140 | 70 | 100 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 120 | 90 | 80 |
| சின்ன வெங்காயம் | 320 | 250 | 300 | 500 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 240 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 180 | 240 | 400 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 70 | 100 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 160 | 120 | 140 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 170 | 200 | 240 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 60 | 120 | 120 | 100 | 100 |
| கறிமிளகாய் | 250 | 200 | 240 | 400 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 150 | — | 80 | 400 | 200 |
| போஞ்சி | 200 | 100 | 130 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | — | 160 | 140 | 150 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 40 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 130 | 150 | 160 | 200 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 75 | 60-90 | 100 | 90 |
| இராசவள்ளி | - | 200 | — | - | - | - |
| வெங்காயப்பூ | 250 | 230 | — | 240 | - | - |
| முள்ளங்கி | 80 | 30 | 80 | 120 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 8 | 20 | 20 | 25 | 20 |
| ஈரப்பலா | - | 30 | — | 80 | 80 | - |

கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நேரில் சென்று பார்வையிட்டு நிலைமையை ஆராயுங்கள்

கடவுளே! மழை வராதா? ஏன்தான் இப்படிச் சோதிக்கின்றாய் என்று ஏங்கித் தவித்த மக்கள் இப்போது கடவுளே! மழை நிற்காதா என்று சலித்துக் கொள்கின்றனர்.

அந்தளவுக்கு இயற்கை மக்கள் சமூகத்தை வாட்டி வதைக்கின்றது.

இதை நாம் கூறும்போது அட, இயற்கை உங்களை வாட்டி வதைக்கவில்லை. நீங்கள் தான் இயற்கைக்கு மாறாக நடந்தீர்கள். அதனால் இயற்கை குழப்பமடைந்து எல்லாவற்றையும் குழப்புகிறது என்று கருத்துரைப் போரும் இருக்கவே செய்வர்.

அவ்வாறு கருத்துரைப்போரை நாம் அடியோடு நிராகரித்து விடவும் முடியாது. இயற்கை என்பது ஒழுங்கானது. ஒழுங்கை ஒழுங்காகப் பேண வேண்டும்.

ஒழுங்கில் ஒழுங்கீனம் ஏற்பட்டு விட்டால் எல்லாமும் ஒழுங்கீனமாகிவிடும். இதுவே தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, கடந்த பல நாட்களாக தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் பெய்துவரும் மழை வெள்ளம் வீதிகளிலும் குன்று குழிகளிலும் தேங்கி நின்று பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகிறது.

அமைக்கப்பட்ட வீதிகள், கட்டப்பட்ட பாலங்கள், வெட்டப்பட்ட கால்வாய்கள் இவற்றில் ஏற்பட்ட தொழில்நுட்பக் குறைபாடுகள் அல்லது அனுபவமிக்கவர்களின் ஆலோசனை பெறப் படாமை காரணமாகவும் மழை வெள்ளம் வழிந்தோட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தவிர வீதிகள் திருத்தப்படாமை, வெள்ள வாய்க்கால் அமைக்கப்படாமை போன்றவற்றாலும் மழை வெள்ளம் தேங்கி நின்று இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் பங்கம் செய்கிறது.

எனவே இது தொடர்பில் திருத்தங்களும் மீள்கட்டுமானங்களும் நிர்மாணப் பணிகளும் செய்யப்பட வேண்டும்.

அதைச் செய்வதற்காக மழை பெய்து கொண்டிருக்கும் இவ்வேளையில் எங்கெல்லாம் வெள்ளம் தேங்குகிறதோ; எங்கெல்லாம் வடிகால்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் நேரில் சென்று அவற்றைப் பார்வையிட்டுப் பதிவு செய்வதுடன் துறை சார் நிபுணர்களையும் அழைத்துச் சென்று எவ்வாறான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும், எவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும், ஏலவே செய்யப்பட்ட வேலைத்திட்டங்களில் நடந்த தவறுகள் என்ன? அவற்றைச் செப்பனிடுவதற்கான திட்டங்கள், தொழில்நுட்ப முறைகள் பற்றி தீர்மானிக்க வேண்டும்.

இப்பதிவிடல் புகைப்படங்களின் சான்றுப் படுத்தலுடன் செய்யப்படுவது சாலச்சிறந்தது.

இத்தகையதொரு நடைமுறையின் கீழ், மழை நீர் தேங்கிக் கிடக்கின்ற குறைபாடுகள் நிவர்த்திக்கப்படுமாயின் அது முழு வெற்றி தரும்.

எனவே சம்பந்தப்பட்ட சகல அமைப்புக்களும் அரச தரப்புகளும் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ள சமநேரத்தில் பொருத்தமான ஆய்வை நேரில் சென்று மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம் மக்கள் நிறைவான சேவையைப் பெறவும் வெள்ளப்பெருக்கின் உபாதையில் இருந்து விடுபடவும் முடியும்.

# ஊழல் குற்றச்சாட்டில் கைதான இளவரசர்கள் வெளிநாடு செல்லத்தடை

(றியாத்)

ஊழல் குற்றச்சாட்டில் கைதான சவுதி இளவரசர்கள், அமைச்சர்கள், தொழிலதிபர்கள் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசராக முகமது பின் சல்மான் பதவி ஏற்ற பிறகு நிர்வாகத்தில் பல்வேறு முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளார்.

தனது தந்தையும் மன்னருமான சல்மானுக்கு பிறகு மன்னர் பதவி ஏற்கும் முன் நிர்வாகம் முழுவதும் தனது கையில் வரும் வகையில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் தலைமையில் அமைக்கப்பட்ட ஊழல் தடுப்பு குழுவினர் அதிரடி நடவடிக்கை எடுத்து 11 இளவரசர்கள், 4 அமைச்சர்கள், 10 முன்னாள் அமைச்சர்கள் ஆகியோரை ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்தனர்.

மேலும் தொழில் அதிபர்களும் இந்த கைது வளையத்தில் சிக்கி உள்ளனர்.

இவர்கள் மீது பண மோசடி, இலஞ்சம், அரசு நிர்வாகத்தில் முறைகேடு செய்தல், தனிப்பட்ட சுய லாபத்திற்காக அரசு அலுவலகத்தை பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக பிரபல நிறுவனமான அல் தய்யார் நிறுவனத்தின் முக்கிய தலைவர் நசீர் பின் அக்கில் அல் தய்யார், வெளிநாடுகளில் தொழில் செய்து வரும் இளவரசர் அல்வாலித் பின் தலால், இளவரசர் மித்தப் பின் அப்துல்லா ஆகியோர் கைது செய்யப்பட்டு இருப்பதும், விசாரணை முடியும் வரை அவர்கள் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டு இருப்பதும் கூடுதல் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# வட மாகாண முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்துமாறு கோரிக்கை

வடமாகாணத்தில் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருக்கும் முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்துமாறும் முச்சக்கரவண்டிகள் பயணிகளிடம் அறிவிடும் பணத்தை நிர்ணயம் செய்யுமாறும் வடமாகாண சபையில் விசேட கவனயீர்ப்பு பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. மாகாண போக்குவரத்து அமைச்சு இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 109ஆம் அமர்வு நேற்று பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. இதன்போதே எதிர்கட்சி உறுப்பினர் ஒருவர் மேற்படி விசேட கவனயீர்ப்பை சபைக்கு கொண்டு வந்தார். கவனயீர்ப்பை சமர்ப்பித்து அவர் உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் பயணிகளிடம் தாங்கள் விரும்பியதை போலவும், ஒருவருக்கொருவர் வித்தியாசமாகவும் கட்டணம் அறிவிடுகிறார்கள்.

இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். மேலும் பயணிகளிடம் பைகளை பிடுங்கி தங்கள் முச்சக்கர வண்டிகளில் ஏற்றி கொண்டு வருமாறு வற்புறுத்துகிறார்கள். எனவே கொழும்பில் உள்ள நடைமுறையை ஒத்ததாக வடமாகாணத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் நடவடிக்கையை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்தி மீற்றர் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், மாகாண போக்குவரத்து அமைச்சு அது தங்களுடைய விடயம் என கூறிய மையினால் அரசாங்க அதிபர் தாம் மேற்கொண்டிருந்த நடவடிக்கையினை உடனேயே நிறுத்தியிருக்கின்றார். இந்நிலையில் போக்குவரத்து அமைச்சு இந்த விடயத்தில் தலையிட்டு மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு அவர்கள் எவ்வாறான நடவடிக்கையை எடுத்தார்கள் என்பதை அறிந்து முச்சக்கர வண்டிகளை கட்டுப்படுத்தி பயணிகளிடம் அறவிடும் கட்டணத்தை நிர்ணயம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் தனது விசேட கவனயீர்ப்பு ஊடாக முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது. (ம-4)

# வவுனியா நகர் அரச பேருந்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வவுனியா நகரப் பகுதி அரச பேருந்து நிலையத்தில் வைத்து புத்தளம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவருடைய பயணப் பையினுள் நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சாவுடன் சந்தேகநபரான இளைஞரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ. மஹிந்த தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5. 30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் வைத்து கிளிநொச்சியில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த அரச பேருந்தை சோதனையிட்டபோது நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு பயணப் பையில் வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோவும் 910 கிராம் நிறையுடைய கஞ்சாவுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வவுனியா நகரப் பகுதியில் நேற்றைய தினத்துடன் 4ஆவது நாளாகவும் தொடர்ந்து கேரள கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-15)

# மோட்டார் சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதி சமிக்ஞை குறியீட்டு கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

நேற்று மதியம் 2 மணியளவில் மந்திகை சந்தியில் இடம்பெற்ற இவ்விபத்தில் கற்கோவளத்தைச் சேர்ந்த வே.சிவதாசன் (வயது-34) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நெல்லியடியில் இருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மந்திகை சந்தி வளவில் திரும்ப முற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் எதிரேயிருந்த கம்பத்துடன் மோதி தூக்கி எறியப்பட்டார்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த வந்தவர் சிறு காயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-30,60)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கர்ப்பமாக இருக்கும் போது வீடு கட்டலாமா?**

ஒருவர் வீடு கட்டும் போது பலவித சிந்தனைகளுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. அதிக சிரத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டி உள்ளது.

அவ்வப்பொழுது மனச்சோர்வுக்கு ஆளாகிக் கொண்டே இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் மனைவி கர்ப்பம் வேறு அதிக மனப்பயத்தையும் மன அழுத்தத்தையும் கொடுக்கும் இருபெரும் பிரச்சினைகளை ஒரு சேர ஒருவர் அனுபவிக்கும் போது உடல் நலத்திற்கு கேடு உண்டாகும். ஆகவே மனைவி கர்ப்பமாக இருக்கும் போது வீடு கட்டக் கூடாது என்பார்கள். (தொடரும்)

# சதுரங்கப் போட்டி 2017-2018

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் 2017/2018 இற்கான தெரிவுப் போட்டிகள்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை போட்டி இணைப்பாளர் த.அருணகிரிநாதனுடன் தொடர்பு கொண்டு அல்லது யாழ்.இந்துக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை இயங்கும் தற்காலிக அலுவலகத்தில் பெற்று போட்டிக்கான கட்டணத்துடன் ஒப்படைக்க வேண்டும். போட்டி ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக 7 வயது, 9 வயது, 11 வயது, 13 வயது, 15 வயது, 17 வயது ஆகிய பிரிவுகளில் நடைபெறும். போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களை கொண்டு வருதல் கட்டாயமானது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# இளம் வீரர்களுக்கு டோனி தடையில்லை சரியான நேரத்தில் அவர் ஓய்வுபெறுவார்

## ஷேவாக் தெரிவிப்பு



இந்திய அணியின் முன்னாள் கப்டன் டோனி எப்போதும் இளம் வீரர்களுக்கு இடையூறாக இருந்ததில்லை என்று வி.வி.எஸ்.லட்சுமணன் மற்றும் அகர்கர் கருத்துக்கு விரேந்திர ஷேவாக் பதிலடி கொடுத்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிராக ராஜ்கோட்டில் நடந்த 2ஆவது 20 ஓவர் போட்டியில் இந்தியா 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது. இப்போட்டியில் டோனி அதிரடியாக விளையாடவில்லை. அவர் 37 பந்தில் 49 ஓட்டங்கள் எடுத்தார். அவர் ஆட்டம் நிதானமாக இருந்ததால் விமர்சனத்துக்குள்ளானது.

இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் வி.வி.எஸ்.லட்சுமணன், அகர்கர் ஆகியோர் டோனியின் பட்டிங் குறித்து கேள்வி எழுப்பினர்.

ஆட்ட இலக்குக்கு தகுந்தபடி டோனி அடித்து விளையாடவில்லை. அவரது நிதானமான ஆட்டத்தால் அணியின் உத்வேகம் நியூசிலாந்துக்கு சாதகமாக திரும்பியது. 20 ஓவர் போட்டியில் டோனி 4ஆவது வீரராக களம் இறங்க வேண்டும்.

பெரிய ஓட்ட இலக்கை நோக்கி ஆடும் போது டோனியின் இது போன்ற நிதானமான ஆட்டம் வெற்றிக்கு உதவாது.

20 ஓவர் போட்டியில் தோனி இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வழியிட வேண்டும். அவர் ஒதுங்க வேண்டிய நேரம் இதுதான் என்று கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வி.வி. எஸ். லட்சுமணன் கருத்துக்கு முன்னாள் அதிரடி பட்ஸ்மேன் வீரேந்திர ஷேவாக் பதிலடி கொடுத்துள்ளார். அவர் கூறியதாவது.

டோனி எப்போதும் இளம் வீரர்களுக்கு இடையூறாக இருந்ததில்லை. சரியான நேரத்தில் அவர் ஓய்வுபெறுவார். தற்போதும் 20 ஓவர் போட்டியிலும் டோனி இந்திய அணிக்கு தேவை.

டோனிக்கு பதிலான மாற்று வீரரை இந்திய அணி இன்னும் கண்டுபிடிக்கவில்லை. டோனி அணியில் உள்ள தனது பங்களிப்பை உணர்ந்து விளையாட வேண்டும்.

அவர் முதல் பந்திலேயே அடித்து ஆட வேண்டும். இதை அணி நிர்வாகம் அவரிடம் தெரிவிக்க வேண்டும். அவர் விரைவில் அவுட் ஆனாலும் அதிரடியாக விளையாட வேண்டும் என்று அணி நிர்வாகம் உறுதி அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (க)

## டோனி ஒரு ஜாம்பவான்

# என்ன செய்ய வேண்டும் என அவருக்கு தெரியும்

## புவனேஷ்வர் குமார்



டோனியின் ஆட்டத்தில் யாருக்கும் சந்தேகம் இல்லை என்று இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார் திருவனந்தபுரத்தில் அளித்த பேட்டியில், 'பும்ரா பந்து வீசும் முறை வித்தியாசமாக இருக்கும். இதனை புரிந்து கொள்வதில் பட்ஸ்மேன்களுக்கு சிரமம் ஏற்படும். அவர் தனது பந்து வீச்சில் நிறைய முன்னேற்றம் கண்டுள்ளார். யார்க்கர் மற்றும் சுலோவாக பந்து வீசுவதிலும் நல்ல ஏற்றம் கண்டு இருக்கிறார். பும்ராவுடன் பந்து வீசுவது நம்பிக்கையை அளிக்கக் கூடியதாகும்.

போட்டி தொடங்கியதும் நாங்கள் ஆடுகளத்தின் தன்மை குறித்து கருத்து பரிமாறி கொள்வோம். எந்த மாதிரியான அணுகுமுறையை கடைப்பிடிப்பது என்பது குறித்தும் ஆலோசிப்பதால் இருவருக்கும் நல்ல பலன் கிடைக்கிறது. ராஜ்கோட்டில் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி கண்ட தோல்விக்கு பந்து வீச்சாளர்களை குற்றம் சாட்டக் கூடாது.

நியூசிலாந்து அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. காலின் முன்ரோ எங்களுக்கு சிரமம் கொடுத்து வருகிறார். அந்த அணியில் கனே வில்லியம்சன், மார்ட்டின் கப்தில் ஆகிய சிறந்த பட்ஸ்மேன்களும் உள்ளனர். டோனியின் ஆட்டத்தில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அவர் ஒரு ஜாம்பவான். அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும்' என்று தெரிவித்தார். (க)

# இந்திய மண்ணில் வெற்றிபெற வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு! ஹெராத்



இந்திய மண்ணில் ஒரு டெஸ்ட் போட்டியிலாவது வெற்றி பெற வேண்டும் என்பதே என்னுடைய கனவு என்று இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ஹெராத் தெரிவித்துள்ளார்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 16 ஆம் திகதி கொல்கத்தாவில் தொடங்குகிறது. இதற்கான இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதில் அனுபவ சுழற்பந்து வீச்சாளரான ஹெராத் இடம்பிடித்துள்ளார். இலங்கை அணி இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா மண்ணில் இன்னும் வெற்றி பெறவே இல்லை. இந்திய மண்ணில் வெற்றி பெற வேண்டும் என்பது தான் கனவு என்று ஹெராத் கூறியுள்ளார்.

இதுகுறித்து ஹெராத் கூறுகையில், "இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்பது எனது கனவு. அப்படி வெற்றி பெற்றால் மிகவும் சிறப்பானதாக இருக்கும். பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என கைப்பற்றியது அதிக அளவில் நம்பிக்கையை கொடுத்துள்ளது.

வெற்றி என்ற மனநிலை மிகவும் முக்கியமானது. பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய அதே உத்வேகத்துடன் விளையாடினால் இந்தியாவிற்கு எதிராக வெற்றி பெற முடியும் என்றார். (க)

## ஐ.பி.எல்.சூதாட்ட விவகாரத்தில்

# டோனி, டிராவிட் எனக்கு ஆதரவு கொடுக்கவில்லை

## ஸ்ரீசாந்த் குற்றச்சாட்டு



ஸ்பாட் பிக்சிங் சூதாட்ட விவகாரத்தில் டிராவிட்டும், டோனியும் தனக்கு ஆதரவு அளிக்கவில்லை என்று ஸ்ரீசாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

2013 ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல். போட்டியின்போது ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஸ்ரீசாந்த், அங்கித்சவான், அஜித் சண்டிலா உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து ஸ்ரீசாந்துக்கு கிரிக்கெட் வாரியம் ஆயுட்கால தடை விதித்தது. ஸ்பாட் பிக்சிங் சூதாட்ட வழக்கில் இருந்து ஸ்ரீசாந்த் உள்ளிட்ட 36 பேரை விடுவித்து டில்லி நீதிமன்றம் கடந்த 2015 ஆம் ஆண்டு உத்தரவிட்டது.

இதையடுத்து தனக்கு விதிக்கப்பட்ட ஆயுட்கால தடையை எதிர்த்தும் ஸ்ரீசாந்த் கேரள உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். அவரது தடையை நீக்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து கிரிக்கெட் வாரியம் தாக்கல் செய்த வழக்கில் ஸ்ரீசாந்தின் ஆயுட்கால தடையை உறுதி செய்து கேரள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து ஆயுட்கால தடையை நீக்கக் கோரி கிரிக்கெட் வாரியத்துக்கு எதிராக சிறப்பு நீதிமன்றில் வழக்கு தொடரப் போவதாக ஸ்ரீசாந்த் அண்மையில் அறிவித்தார்.

அதோடு ஸ்பாட்பிக்சிங் சூதாட்ட விவகாரத்தில் 13 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும், ஆனால் கிரிக்கெட் வாரியம் தனக்கு எதிராக மட்டுமே ஒருதலைப்பட்சமாக செயற்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஸ்பாட் பிக்சிங் சூதாட்ட விவகாரத்தில் டிராவிட்டும், டோனியும் தனக்கு ஆதரவு அளிக்கவில்லை என்று ஸ்ரீசாந்த் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஸ்ரீசாந்த் கூறியதாவது,

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் சார்பாக இருந்த ராகுல் டிராவிட் என்னைப் பற்றி நன்கு அறிந்தவர். அப்படி இருந்தும் அவர் எனக்கு ஆதரவு தரவில்லை. டோனிக்கு உணர்வுபூர்வமாக தகவல் அனுப்பி இருந்தேன். அதற்கும் அவர் பதில் அனுப்பவில்லை.

டில்லி பொலிஸார் 16 அல்லது டாப் 10 இந்திய வீரர்கள் மீது குற்றம்சாட்டி இருந்தனர். இதில் 6 பேர் பெயர் வெளியாகி இருந்தால் கிரிக்கெட் விளையாட்டை உண்மையாக பாதித்து இருக்கும்.

பி.சி.சி.ஐ. தேசிய அணி அல்ல. தனியார் நிறுவனம். எனக்கு வாய்ப்பு கொடுத்தால் மீண்டும் விளையாடுவேன். விளையாட அனுமதிக்காவிட்டால் வேறு நாட்டுக்காக ஆடுவேன் இவ்வாறு ஸ்ரீசாந்த் கூறினார். (க)

## தவறி விழுந்த...

இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்னால் கணவருடன் சென்று கொண்டிருக்கும் போது வீதிக்குக்குறுக்கே நாய் குறுக்கிட்டது. இதன்போது குறித்த பெண்ணின் கணவர் மோட்டார் சைக்கிளை சடுதியாக நிறுத்த முற்பட்ட போது மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த பெண் கீழே விழுந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-10,30)

## மோட்டார் சைக்கிளின்...

விக்கப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டளவு பெற்றோல் நிரப்பப்படுகின்றது.

இந்தநிலையில், கொழும்பில் ஒருவர் மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியைக் கழற்றிக் கொண்டு எரிபொருள் நிலையத்துக்கு வந்த சுவாரசிய சம்பவம் நடந்துள்ளது. அந்த ஒளிப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வைரலாகப் பரவுகின்றன. (ம-4)

## முள்ளிவாய்க்கால்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் பாக்கியநாதன் மரியமலர் என்பவருடைய காணியில் அவர் வசிக்கும் வீட்டிற்கு முன்னால் கொட்டில் ஒன்றை அமைப்பதற்காக நிலத்தை தோண்டும் போது மிதிவெடிகள் இருப்பதை அவதானித்ததை தொடர்ந்து இந்த தகவலை இராணுவத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்

உடனே குறித்த பகுதிக்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து 50 மிதிவெடிகளை மீட்டு செயலிழக்க செய்துள்ளனர். (ம-281)

## புலம்பெயர் நாடு...

தமிழ் மக்களுக்கென தனிநாடொன்று இல்லாததே இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு இருக்கின்ற பிரதான பிரச்சினை என்று பாளி மொழி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு உள்நாட்டில் தீர்வு தேடுவதை விடவும், அதிகளவான தமிழ் மக்கள் வாழ்கின்ற புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று சுயநிர்ணய உரிமை உட்பட தனிநாட்டை கோரும்படியும் அவர் தெரிவித்தார்.

எதிர்பார்ப்புக்களை ஏற்றிவைக்கும் ஒளி என்ற தலைப்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் முன்னாள் உறுப்பினரும், ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவும் கலந்துகொண்டார்.

இதன்போது உரையாற்றிய மெதகொட அபயதிஸ்ஸ தேரர்,

அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்கு வரும்படியே நான் கூறுகின்றேன். பிரிவினைவாதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஏதாவது ஒன்றை வழங்கி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி இடவே எதிர்பார்க்கின்றனர் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். உண்மையிலேயே தமிழ் மக்களுக்கு பிரச்சினை இல்லை என்று நாங்கள் கூறக்கூடாது. தமிழ் மக்களுக்கு என்ன தான் பிரச்சினை இருக்கிறது என்று நாங்கள் கூறுகின்றோம் தானே. உண்மையிலேயே நான் இந்த விடயம் குறித்து ஆழமாக யோசித்துப்பார்த்தேன். அவர்களுக்கென்று தனியான ஒரு நாடு இல்லாமையே தமிழ் மக்களுக்குரிய பிரச்சினையாகும்.

இந்தப் பிரச்சினையை அவர்கள் தமிழ் நாட்டிற்குச் சென்று அல்லது, மலேஷியா, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு ஒரு பகுதியை தனிநாடாக கோருங்களேன். எனினும் தங்களது ஆதரவில் தௌிவாக இந்த அரசாங்கத்திடம் அவசியங்களை பூரணப்படுத்திக் கொள்ள தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த உலகினில் இலங்கையை விடவும் அதிகளவான தமிழ் மக்கள் வாழ்கின்ற நாடுகள் உள்ளன. அங்கு சென்று சுயநிர்ணய உரிமையுடன் அவ்வற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்படி பெறுவார்களாயின் எங்களால் முடியுமானவற்றை நாங்கள் சிந்தித்துக் கூறுவோம் என்று மேலும் குறிப்பிட்டார். (ம-4)

## கரும்புத் தோட்டக்...

காணி தொடர்பாக நேற்றையதினம் வடக்கு மாகாண சபை அமர்வில் உறுப்பினர் சு.பசுபதி பிரஸ்தாபித்திருந்த போதே முதலமைச்சர் அதற்கு இவ்வாறு பதிலளித்தார்.

கிளிநொச்சி கரும்புத்தோட்டக் காணி தொடர்பில் ஏலவே வடக்கு மாகாண சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி காணி குறித்து முதலமைச்சர் எழுத்து மூலமான விளக்கமொன்றை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஊடாக சபைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

இதேவேளை கரும்புத்தோட்டக் காணி தொடர்பான விரிவான தகவல்களைப் பெற்று அதனைச் சபையில் முதலமைச்சர் தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய கடிதம் அவைத் தலைவர் ஊடாக முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (ந-4)

## கேணிக்குள் குதித்த...

பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

நேற்றைய தினம் பாடசாலையில் பரீட்சை எழுதிவிட்டு நண்பகல் 12.30 மணியளவில் நண்பர்களுடன் குறித்த மாணவன் வீட்டுக்கு சென்றுள்ளார். செல்லும் வழியில் பிள்ளையார் கோவில் கேணிக்கு அருகில் குறித்த மாணவனின் கொம்பாஸ் நிலத்தில் உள்ள வெள்ளத்தில் விழுந்துள்ளது.

அதை எடுத்து உதறிய போது அருகில் இருந்த கேணிக்குள் மாணவனுடைய அடையாள அட்டை விழுந்துள்ளது. உடனடியாக குறித்த மாணவன் தனது அடையாள அட்டையை மீட்க கேணிக்குள் குதித்துள்ளார். அவருடன் சென்ற மாணவர்களில் இருவரும் அவரை காப்பாற்ற குதித்துள்ளனர். ஆனால் அவரை காப்பாற்ற முடியாமல் கேணியில் இருந்த கம்பியை பிடித்து மேலே வந்துள்ளனர். ஆனால் குறித்த மாணவன் நீச்சல் தெரியாத காரணத்தினால் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-9,30)

## தீக்காயங்களுக்கு...

ஜெயமலர் (வயது-43) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு மரணமானார்.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-4)

## பெற்றோல் நெருக்கடியை...

இந்த குழுவின் மூலம் பெற்றோல் நெருக்கடிநிலைக்கான காரணம் கண்டறியப்படவுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார். (ம-4)

## யாழில் மழை...

முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 8 வீடுகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 13 வீடுகளும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 2 வீடுகளும்,சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 15 வீடுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 22 வீடுகளும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 3 வீடுகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 வீடுகளும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடும் பகுதி அளவில் பாதிக்கப்பட்டுள்ளது என மேற்குறித்த புள்ளி விபரத்தில் நேற்று பதிவிடப்பட்டுள்ளது. (ம-9)

## ஆளுநரின் முறையற்ற...

பட்ட அவுஸ்ரேலிய புலமைப்பரிசிலினை மீண்டும் தொடர்வதற்காக அந்நாட்டுக்கு செல்வதற்கான விடுமுறையை எதுவித கால தாமதமுமின்றி அனுமதியளிக்குமாறு வட மாகாண ஆளுநருக்கு நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சின் மேலதிக கல்விப் பணிப்பாளர் மரியதாஸ் ஜெகூ, அவுஸ்ரேலிய நாட்டினால் இலங்கை நிதியமைச்சின் கீழ் பரிபாலிக்கப்படுகின்ற வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் (டிப்பாட்மன்ட் ஒவ் எக்ஸ்ரேனல் றிசோர்ஸ்) ஊடாக வழங்கப்படுகின்ற இரண்டு ஆண்டுகால புலமைப்பரிசில் கற்கைநெறிக்கு விண்ணப்பித்து, அதற்காக கடந்த 2.10.2016 அவுஸ்ரேலியாவுக்கு சென்றிருந்தார். இவ்வாறு இவர் செல்வதற்கான நிர்வாக கட்டமைப்பிலான அனைத்து அனுமதிகளையும் பெற்று வடக்கு மாகாண ஆளுநரால் விடுமுறை அளிக்கப்பட்டே அங்கு சென்றிருந்தார்.

இந்த நிலையில் குறித்த நபர் நெல்சிப் திட்டத்தின் கீழ் மோசடிகளை புரிந்துள்ளார் எனவும், அவருக்குரிய விசாரணைகள் இடம்பெற்று வருவதால் அவருக்கு ஆளுநரால் வழங்கப்பட்ட விடுமுறை கால அனுமதியானது ஏற்றுக்கொள்ளப்படவில்லை, அது நிராகரிக்கப்பட்டுள்ளது என கூறி மீண்டும் நாட்டுக்கு திருப்பியனுப்புமாறு வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஆகியோரால் அவுஸ்திரேலிய தூதுவராலயத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அவர் மீண்டும் நாட்டுக்கு திருப்பியழைக்கப்பட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து நாட்டிற்கு வந்த குறித்த மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறி, கடந்த 06.10.2016 அன்று மாகாண கல்விப் பணிப்பாளரால் அனுப்பப்பட்ட கடிதம், 07.10.2016 அன்று வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலரால் அனுப்பப்பட்ட கடிதம், 30.09.2016 அன்று வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியன சட்டத்திற்கு முரணானதும் வெற்று வெறிதானது எனவும் ஆணை பிறப்பிக்குமாறு மன்றை கோரியும், அதேநேரம் 19.09.2016 அன்று வடமாகாண ஆளுநரால் வழங்கப்பட்ட விடுமுறை கடிதத்தை நடைமுறைப்படுத்த ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் கோரி யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இவ் வழக்கானது யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு நேற்றைய தினம் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. (ம-9)


# UNIVERSITY OF JAFFNA

FACULTY OF AGRICULTURE
EXTENSION OF ADMISSION FOR PUBLIC OFFICERS
FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2016/2017)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2016/2017

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/= each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/= drawn in favour of the Bursar, Envelope (for Rs. 5.00) not less than 9"x 4" size.

**Extended Date of closing is from 30th of October 2017 to 17th of November 2017.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

**07.11.2017** (C-325) **REGISTRAR**



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மாவட்ட நீதிபதி...

அறிவித்துள்ளது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், வவுனியா மாவட்ட நீதிபதியாகவும், வவுனியா மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவும், கல்முனை மாவட்ட நீதிபதி வி.இராமகமலன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுடின் மூதூர் மாவட்ட நீதிபதியாகவும், மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா கல்முனை மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர்.

மட்டக்களப்பு நீதவான் எம்.கணேசராஜா, மன்னார் மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர். (ம-4)

## இராணுவம்-இளைஞர்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தை சிரமதானம் செய்வதற்கு சென்ற மாவீரர்களின் உறவினர்கள் நேற்றும் இராணுவத்தினரினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற தற்போதைய ஆட்சியிலும் மாவீரர் துயிலும் இல்லங்களை சிரமதானம் செய்வதற்கும் மாவீரர்களை நினைவுகூருவதற்கு இராணுவத்தினர் தடை விதிக்கின்றமை கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் நேற்றும் ஒரு தரப்பு குறித்த பகுதியில் சிரமதானம் செய்யச் சென்று இந்நிலை ஏற்பட்டிருந்தது இவர்களுக்கிடையில் யார் மாவீரர் தினத்தை செய்வது என்ற நிலை உருவாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-281)

## வட மாகாண சபை...

பதியுதீன் அண்மையில் தமது பதவியிலிருந்து விலகினார்.

இந்த நிலையில் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அலிக்கான் ஷெரீப் நேற்று இடம்பெற்ற வட மாகாண சபையின் 109 ஆவது அமர்வில் புதிய உறுப்பினராக பதவியேற்றுள்ளார். (ம-4)

## எரிபொருள்களுடன்...

மசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

எரிபொருள்கள் நெருக்கடி நிலை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். (ம-4)

## இந்திய மீனவர்கள்...

ரியால் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன் தினம் இரவு புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 4 மீனவர்கள் ஒரு படகில் வந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்துள்ளனர். அப்பகுதியில் ரோந்து சென்ற இலங்கை கடற்படை அவர்களை கைது செய்ததுடன். அவர்களின் ஒரு படகையும் கைப்பற்றியிருந்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் நேற்றைய தினம் ஒப்படைக்கப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் மீனவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதுவரை மொத்தமாக 80 மீனவர்கள் சிறையில் இருப்பதுடன் 160 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (ம-9)

## யாழில் மழை காரண...

அந்த வகையில் உடுவில்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 94 குடும்பங்களை சேர்ந்த 342 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 110 குடும்பங்களை சேர்ந்த 381 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 17 குடும்பங்களை சேர்ந்த 60 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 45 குடும்பங்களை சேர்ந்த 175 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 380 குடும்பங்களை சேர்ந்த 1207 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 162 குடும்பங்களை சேர்ந்த 599 பேரும், வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 40 குடும்பங்களை சேர்ந்த 137 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 213 குடும்பங்களை சேர்ந்த 769பேரும்,சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 34 குடும்பங்களை சேர்ந்த 185 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மின்னல் காரணமாக உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 2 குடும்பங்களில 2 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரு வீடுகளும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில ஒரு வீடும் 23


### கண்ணீர் அஞ்சலி



திருமதி ஆறுமுகம் கமலாம்பாள்

மல்லாவி முத்துப்பிள்ளையார் வண்ணச் சோலை ஸ்தாபனத்தின் முகாமையாளர் திரு.ஆ.தவநாதனின் அன்புத் தாயார் திருமதி ஆறுமுகம் கமலாம்பாள் அவர்கள் 07.11.2017 செவ்வாய்க்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், பணியாளர்கள்
முத்துப் பிள்ளையார் வண்ணைச் சோலை
பிள்ளையார் ஸ்தாபனம், மல்லாவி கிளிநொச்சி

மலர்வு:-11.01.1929
உதிர்வு:-07.11.2017

(1256)



### அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இன்னும் ஓரிரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.

0768226243

பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச வீசா வாய்ப்புக்கள் இருக்காது.ஆகவே இப்போதே முந்துங்கள்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம்.கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



வே.கமலேந்திரன் -குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

V2 TRAVELS

(C-333)

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, ஸ்ரான்லி வீதி | A9 வீதி | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |



### பணியாளர்கள் தேவை

2017இன் இம் மாதத்திற்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. தங்களிடம் O/L, A/L தகைமை இருப்பின் எமது நிறுவனத்தில் பணிபுரியலாம்.

- யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு
- வயதெல்லை 18 – 30
- முன் அனுபவம் அவசியமற்றது.

(1255)

No :- 74 கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 077 157 1699, 077 439 5501, 021 567 9001



### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

(1237)



### Dynamic Holding Lanka (PVT) LTD

இது ஓர் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்!

எமது தனியார் நிறுவனத்தில் O/L, A/L தகைமைகளுடன் பணிபுரியலாம். உலகில் எப்பாகத்திலும் எமது திறமைகளை வெளிக்காட்டலாம்.

- முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகியோருக்கு முன்னுரிமை
- உணவு, தங்குமிட வசதிகள் உண்டு
- வயதெல்லை 18– 30
- 18 பேர் மட்டும்

தொடர்புகளுக்கு : 076 435 6364, 077 408 3273

(1255)



### CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

(C-334)



### கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.

GUNA BEST PC 0779086737

லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்

LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION

கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் யாழ்ப்பாணம்.

(C-326)



### வாகன சேவிஸ்நிலையம் விற்பனைக்கு

யாழ் நகருக்கு அண்மையில் விசாலமான நிலப்பரப்புடன் வாகன சேவிஸ் நிலையம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 075 942 6609

(1249)



### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-303)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



### வேலைவாய்ப்பு

22 வருடமாக இயங்கிவரும் Granton Multinational Company யில் (ஆண்/பெண்) இருபாலருக்குமான முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் 45 பேருக்கு முன்னுரிமை

- வயதெல்லை 18 – 30 வயதிற்கு உட்பட்டவர்கள்
- அனுமதி இலவசம்
- பயிற்சியின் போது 15000 – 18000 /= பயிற்சியின் பின்னர் ETF, EPF மற்றும் காப்புறுதி வழங்கலாக நிரந்தர சம்பளத்துடன் வேலை நிரந்தரமாக்கப்படும்.
- தங்குமிட வசதி மற்றும் மருத்துவம் இலவசம்

அனுமதிக்கு முந்துங்கள் இன்றே...

மேலதிக தொடர்புகளுக்கு : 076 639 9954 / 077 200 4226

(1097)



### பதவி வெற்றிடம்

இறக்குமதி துறையில் முன்னணி நிறுவனம் தனது புதிய கிளைகளுக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோருகின்றது.

கல்வித் தகைமை :- O/L, A/L வயது :- 18 - 28 வரை

| | | |
|---|---|---|
| Marketing Executive | : | 15 |
| Office Staff | : | 07 |
| Training Assistant | : | 03 |
| Field Supervisor | : | 05 |
| Sales Representative's | : | 14 |
| Administration | : | 05 |

உணவு தங்குமிடம் இலவசம்

தேவை ஏற்படின் பதவிக்கான பயிற்சியும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 105 6848 / 076 604 8378

(1254)



### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை (C-288)

அமெரிக்க லொத்தர் விசா (Green Card) முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா



### இந்தியா செல்லும் பயணிகளுக்கு நற்செய்தி

2000/= விசேட கழிவு

SPECIAL OFFERS

365 நாட்களும் உங்கள் இதயங்களை இணைக்கும் எங்கள் இணையம்

www.nationtravels.com

யாழ் நகரில் 24 மணித்தியால சேவை வழங்குனர்.

Nation popular travels & tours

Hotline : 0715 365 365 Hotline : 0214 920 920

(C-328)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.